உ

சிவமயம்

# வராகி மாலை

மந்திராரூட வாக்கியம் மந்திர சக்கரங்களுடன்



தொகுப்பாசிரியர்

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்பு வர்தம் கை.

# வராகி மாலை

## மந்திராரூட வாக்கியம் மந்திர சக்கரங்களுடன்


தொகுப்பாளர்:
புலவர் நாகமணி விநாயகமூர்த்தி



10-06-2014

விலை 600




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

ஓம் என்பதன் பொருள் என்ன என்ற கேள்விக்கு விடை தெரியாத முருகப் பெருமானான பாலகனிடம் தோற்றுப்போன பிரமதேவனின் கதையினை நாம் அறிவோம். அதேபோன்று ஓம் எனும் பொருளுக்கு விடை அறிய அந்த சிவபெருமானே முருகப் பெருமானுக்கு மண்டியிட்டு ஓம் என்பதின் பிரணவப் பொருளை உலகுக்கு காட்டிய பரமன் கதையறிவோம்.

இதன் மூலம் ஓம் எனும் பிரணவத்தைக் கொண்டு, ரிஷிகளும், முனிவர்களும், மகா ஞானிகளும், மந்திரத்தை அறிந்து, தெரிந்து உண்மை கண்டறிந்தனர். மந்திர வித்தை ஜாலமானது. நானிலத்திலும் வளர்ந்து பல்வேறு பாதகச் செயல் வடிவங்களை விளைவுகளாக உண்டு பண்ணி மானிடரை வதைக்கின்றன.

பில்லி, சூனியம், பேய், பிசாசு என்ற நான்கு வேதங்களாக்கி மக்கள் அல்லாடுகின்றனர். உண்மையான மந்திரங்களுக்கு என்றும் சக்திகள் உண்டு. அதன் வெளிப்பாடுகளில் ஒரு உண்மை சம்பவங்கள் நாம் அறிந்ததும் நாடறிந்த இந்து மத வழிபாடாகும்.

இறைபதமடைந்த அருள் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமி அவர்கள் மந்திர மகிமைதனை உணர்ந்து மக்களுக்கு காயத்திரி மந்திரங்களையும், ஏனைய தெய்வ மந்திரச் சொற்களையும் போதித்து வெற்றியும் கண்டார். அது மட்டுமல்ல பரார்த்த வழியில் மந்திர மகிமைதனை உணர்த்தி நானும் உங்களில் ஒருவர் என்பது போல், காயத்திரி மந்திரத்தை நீங்கள் அதிகமாக உண்மையுடன் உச்சாடனம் செய்யுங்கள். நீங்களும் என்னை விடவும் சக்தி மிக்கவராக முடியும்" என்று உபதேசம் செய்த மகா ரிஷியாக தோன்றிப் புகழோடு மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, உண்மையான மந்திரங்களுக்கு சக்தி உண்டு அதை பயபக்தியுடன் வாலாயம் (பிரியப்படுத்தி) நன்மை பெறலாம் என்பதும் தெய்வீக உண்மையாகும். மந்திரங்களையும், யந்திரங்களையும் பீஜங்களையும். தொகுத்து, தன் தேடல் மானிட தர்மங்களை மக்கள் நல்வாழ்வுக்கு என்பதை புலவர் அவர்கள் இப்படியான புத்தகங்களை வெளியிட்டு வருவது அவரின் பிறப்பில் சைவசமயங்கள் மெருகு பெறுகின்றன. வருங்கால எம் சமய வாரிசுகள் படித்து அறிந்து தெளிவுபெற இவருடைய தூரநோக்கின் சிந்தனைகள் மக்கள் நல்வாழ்வு வாழ பேருதவி செய்கின்றன.

கலாபூசணம், நாகமணி விநாயகமூர்த்தி எனும் இவர் பெயர் பலயுகமாக நிலைக்கலாம்.

தேடி அலைந்து, ஓடி நடந்து, புத்தகங்கள் அனைவரிடமும் சென்றடைய இவர் எடுக்கும் முயற்சி எம் தேசத்தில் நடமாடிய ஆனைக்குட்டி சித்தரின் தன்மை போன்று இருப்பது வேடிக்கை என்பதாகவும், எதிர்காலத்தில் இவரின் செயல்கள் தெய்வத் தன்மையடையும் என்பது எனது தீர்க்கதரிசனமாகும்.

புலவர் நாகமணி விநாயகமூர்த்தி எனும் இவரை நாங்கள் சந்தித்து உரையாடி மகிழ்வதும், அறிவுகளை உண்மைகளை இவரிடம் பெறுவதும் எம் பாக்கியமாகும். வாழ்க அவர் தம் பணி. தொடரட்டும் அவர் தம் தேடல்கள். இறையருள் கிடைக்கட்டும் எங்கள் விநாயகமூர்த்தி என்னும் அடியவருக்கு!

சுபம்

அன்புடன்,
**சிவஸ்ரீ க.ஐ.யோகராஜா குருக்கள்**
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அறிவுரை

நம் இந்து தேசத்தில் பழைய மாந்திரீக விஷயங்களை ஒருவருக்கொருவர் சொல்லாமலே மறைத்துக் கொண்டே வருகின்றனர்.

இக்கெட்ட பழக்கத்தைப் போக்கவே, இவ்வராகி மாலை எனும் சிறந்த மாந்திரீக விஷயங்கள் அடங்கிய நூலை இப்புலவர் அச்சிடுவது பெருமைக்குரியது.

மந்திர யந்திரங்கள் எதுவும் நம் கற்பனையில் உதித்தவை அல்ல. நம் முன்னோர்கள் பழைய ஓலைச் சுவடிகளிலும் புராதன மான நூல்களிலும் உள்ளதைத்தான் முறைப்படுத்தி புதுமெருகூட்டி இதில் எழுதப்படுகின்றது.

மனத்தின் திறந்தான் மந்திரம் மனத்தை நிலைநிறுத்த மந்திரம் தேவைப்படுகிறது.

மந்திரம் என்பது மனத்தை ஒருமைப்படுத்துகின்ற ஒரு சாதனம் மட்டுமன்று, அது மாந்திரீக சாஸ்த்திரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

மந்திரம் என்பது ஒருவகைச் சக்தியே ஆகும். இப்பாரினில் யுக யுகமாய் பலரும் கையாடி வந்த ஒட்டாமரேஸ்வர இயந்திரமென்னும் நான்காவது வேதமாகிய அதர்வண வேதத்தில் சிதறியுள்ளவை மலையாள தேசமெனப் பெயர் கொண்டு அனுபவித்து வரும் இம்மாந்திரீகத்தில் மந்திரம், யந்திரம் தேவதா வசியங்கள் உள்ளடங்கி இந்நூல் வராகி மாலை என வெளிவருகின்றது.

இந்த வராகி மாலை யென்னும் திறந்த மந்திர சாஸ்த்திரத்தை படித்து அனுஸ்டானத்திற்கு கொண்டு வரும் அன்பர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய சில விஷயம் என்னவென்றால் சத்தியம், தர்மம், காமத்தை அடக்குதல், பொய் சொல்லாமை கோபமில்லாமை ஈகை இந்த நற்குணங்கள் கட்டாயம் அமையப் பெற்றவர்களாய் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பாட்டும் மூலமந்திரமும் சேர்த்துத்தான் ஜெபிக்க வேண்டும் ஒன்றை விட்டு ஒன்றை ஜெபித்தால் பலன் கிடையாது. யந்திரத் தகடுகள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி பூஜை நெய்வேத்தியம் தான். ஒவ்வொன்றையும் தனித்தனியாக செய்து சித்திபெறலாம். பௌர்ணமி காலங்களில் பூஜை ஆரம்பிக்க வேண்டும். சூரிய உதயத்திற்கு முன்பு பூஜையை முடித்து விடவேண்டும். யந்திரத்திற்கு பால், இளநீர், பஞ்சகவ்வியம், பன்னீர், இவைகளால் அபிஷேகம் செய்து புணுகு, ஜவ்வாது, அத்தர் இவைகளால் தடவி, சந்தணம் குங்குமம் பொட்டிட்டு ஒரு பீடத்தின் மேல் வைத்து குத்து விளக்கு கொளுத்தி வைத்து செவ்வலரி புஸ்பம், சாத்தி, தேங்காய், பழம், வெ.பா சுண்டல், வடை, சக்கரைப் பொங்கல், பாயாசம், கற்கண்டு இவைகளை நிவேதித்து குருநாதன் கணேசர் அவரவர்கள் குலதெய்வத்தால் பூஜை செய்து ஏகாரசித்தனாகயிருந்து ஒரு மண்டலம் ஜெபிக்க இந்நூலில் சொல்லிய எல்லா விதமான பிரயோகங்களும் சித்தியாகும்.

மனம் சலனமுள்ளது. நிலையற்றது. இயங்குவது அந்த மனத்தை அசைவற்று சலனமற்று இருக்கச் செய்வதற்கு எதனைத் துணையாக கொள்வது? இச் சிந்தனையின் விளைவே மந்திரம்

**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டும்.**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டும்.**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டும்.**
**மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாகுமே.**

என்று அகத்தியர் கூறுகிறார்.

மனம் எல்லா நேரமும் செம்மையாக இருப்பதில்லை மனத்தை செம்மைப்படுதுவதற்கு மந்திரம் தேவைப்படுகின்றது. என்று இதனை சிந்தித்து, கையாடிப் பாராட்டுவாயாக.

புலவர் நாகமணி விநாயகமுர்த்தி அவர்களின் சேவையும் தேடலும் மென்மேலும் வளர்ந்து விருட்சமாக வியாபித்து இருக்க இவரைப் பாராட்டுகின்றேன்.

**நா. ஜெகதீசன் (பூசாரி)**

ஸ்ரீ லிங்கேஸ்வரர் ஆலயம்
15ம் கிராமம், வேப்பயடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# என்னுரை

பெரியோர்களே!

அண்டசராசரங்கள் அனைத்திலும் வியாபதித்து விளங்கின்றவள் அன்னை ஆதிபராசக்தியாகும். இச்சக்தியானவள் பல திருநாமங்களோடும் வடிவோடு தனைத்தொழுது வணங்கும் மெய்யடியார்களுக்கு நன்னருள் புரிகின்றாள். இச்சக்திகளில் வராகி எனும் அன்னையும் ஓர் தெய்வமாகும். இத்தேவி பன்றி முகமும் அழகிய இளம்பெண்ணின் உடல் அமைப்பும் வடிவான தோற்றத்தோடு காட்சியளிப்பவள் இந்த வராகி அம்மன். இத்தெய்வத்தை நாம் கைகூப்பி தொழுது வழிபட்டால் நமது சகல தேவை அனைத்தையும் நிறைவேற்றி அருளுவாள் என்பதோடு இவ்வராகி அன்னையின் உண்மைக்கு உண்மையான இப்பாடல்கள் எந்திரங்களையும் பூசித்து நற்பேறடைவீர்கள் என நம்புகின்றேன்.

அன்பர்களே!

இவ்வராகிமாலைதனை மகா தொண்டனும் காளித்தாய் பக்தனும் நற்பட்டிமுனையின் குடிபதியாய் வாழ்ந்து மோட்சமடைந்த சாமித்தம்பி வீரசிங்கம் அவர்கள் 1993 ஆம் ஆண்டு அடியேனுக்கு எழுதிப்படிக்க பெரும் மனத்துடன் தந்துதவினார். அப்பெருமகனை இவ்வேளையில் நினைத்து கொள்வதோடு நா. ஜெகதீசன் (பூசாரியார்) அவர்கள் மந்திராரூட வாக்கியம் எனும் நூலை மந்திர எதிரங்களுடன் இப் புத்தகத்தில் இடம் பெற உதவியும் அறிவுரையும் எமக்களித்தார். மற்றும் பெருமனதுடைய பெருமகன் உதவிபுரிதலுக்கு உத்தமன் எம்மோடு உறவாடும் ஐயா க.ஐ.யோகராசாக்குருக்கள் அவர்களும் தன்னிடமுள்ள மந்திர எந்திரங்களை தந்து இந்நூலை நிறைவு செய்தனர். இந்த முப்பெரும் பெரியோர்களே இந்நூலுக்கு மூலகாரணமாகும். இத்தொகுப்புக்கு ஆசியுரை அறிவுரைகள் அளித்த ஐயாமார்களுக்கு படிக்கின்ற தங்களுக்கும் வாழ்த்துக்கள் கூறி வராகி அன்னையின் தாழ் சரணடைகின்றேன்.

வணக்கம்!

அன்புடன்,

**அன்னையின் தொண்டன்**

சேனைக்குடியிருப்பு,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

இவ் வராகிமாலையில் உள்ள ஒவ்வொரு சக்கரங்களையும் பூசிக்கும் நியமனங்களாவன.

பின்வரும் ஒவ்வொரு சக்கரத்தினது மந்திர எழுத்து முதலியவுருவங்களை தாமிர தகட்டில் வரைந்து சுத்தமான இடத்தில் பூசிக்க வேண்டியது பூக்களில் செவ்வலரிப் பூ முக்கியமானது. சூரியன் உதயமுன்னும் அஸ்தமனத்தின் பின்னும் பூசை ஆரம்பிக்க வேண்டியது சக்கரமந்திரம் ஒரு நாட் செய்ய உரு எவ்வளவோ முடியும்வரை செய்தல் வேண்டும். கூடக்குறையச் செய்யலாகாது செபிப்பதற்கு முன் அங்க சுத்தியும் கரசுத்தியும் பூசை முடியும் வரை விரதம் பிடித்து செபத்திற்கு மணி உருத்திரம் பவளம் மணி முத்துச் சிறந்தது. இப்படி அனுஷ்டிக்க வேண்டியவர்கள் காமகுரோதகோபம், பொய், வஞ்சனை அற்றவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களே இதற்கு உரித்துடையவர்கள்.

மேலும் மந்திரம் செபிக்கின்றவர் ஒழுக்கசீலராகவும் தெய்வ நம்பிக்கை உள்ளவராகவும் மனக்கட்டுப்பாடுடைய-வராகவும் இருப்பதோடு அன்னை தந்தை குருவிடம் பயபக்தியோடு நடப்பவரே மிகச் சாலச் சிறந்தவராவார்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்பதிவாலை வசியம்

ஓம் தங்கச்சிலம்பணி பாதாரவிந்தம் தனைநினைந்து சதானியம் என் அங்கத்தில் நின்று குடியாய் வாழ்ந்து அருள் தருவாய், செங்கைக் கபாலி திருபுரவாலை சிவசக்தியே.

ஓம் வாடியம்மா திறிசூலி காங்கேய லெட்சுமி நெற்றிலிட்ட நீலவர்ணப் பொட்டும் நேரே முடித்த கருங்குழக் கொண்டையும் வலது கையில் பிடித்த செந்தாமரைப்பூவும் மாகவாவா வடகயிலாயம் விட்டு என்நாவுக்கெழுந்தருளி நில்லடியம் மா நில்லு வாலை திருபுர சுந்தரியே என் வாக்கிலும் மனதிலும் என் நாவிலும் என் முகத்திலும் நடம்புரியம்மா நடம்புரி

ஓம் வாக்குவால பஞ்சாட்சரியம்மா என் வாக்கிலும் முகத்திலும் மூக்கிலும் கண்ணிலும் முன்னிற்கவே சுவாகா.

## வராகி வசியம்

ஒரு மண்டலம் வரையில் காலை மாலை இரண்டு வேளையும் சக்தி பூசை கிரமப்படி முடித்து கீழ்க்கண்ட மூலமந்திரத்தைக் கொண்டு ஆயிரத்தெட்டு உருச் செபிக்கவும்.

மூலமந்திரம்: ஐயும் கிலியும் சவ்வும் சுவாகா

பலன்: வராகி பிரசன்னமாகி வேண்டிய காரியங்களை நிறைவேற்றுவாள். உலக வாசிகள் வசியமாவார்கள் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


திருச்சிற்றம்பலம்

# வராகிமாலை

**மூலமந்திர யந்திர விதிகளுடன்**

**வினாயகர் துணை**

பெருக்குங் கருணை வராகி தன்மாலையைப்பேசுதற்கு
நெருக்குங் குவிமுலை அம்பிகை வாமன் நிறைந்து மகிழ்ந்
திருக்கும் பரன் சுதன் அங்குசபாமும் எவ்வினையும்
கருக்குங் கயமுகனோர் கோட்டு வைங்கரன் காப்பதுவே.




**மூல மந்திரம்**

ஓம் கெங் கெங் கண பதியே நம - சுவாகா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

## வராகிதுதி

இரு குழை கோமளம்தாள் புட்பராகம் இரண்டு கண்ணும்
குருமணி நீலங்கை கோமேதகம் நகம் கூர்வயிரம்
திருநகை முத்துக்கனிவாய் பவளம் சிறந்தவல்லி,
மரகத நாமம் திருமேனியும் பச்சை மாணிக்கமே.




**மூலமந்திரம்**

ஹம் வராகி சிவசம்புவராகி சிம் வம் சுவாகா


உரு 1008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூஜா விதி

மேற்படி தாமிர தகட்டில் யந்திரம் வரைந்து அபிசேகம் செய்து மஞ்சல் குங்குமம் பன்னீர்சாத்தி தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை அன்னம் மது மாமிசம் முட்டை முருங்கக்காய் படையலிட்டு பாணக்கம் இளநீர் வைத்து தூபதீபம் காட்டி செவ்வலரி புஸ்பத்தால் ஒரு லட்சம் ஒரு மண்டலம் மேற்படி மூலமந்திரத்தால் செபித்து பூர்த்தி செய்து செபிக்கச் சித்தியாகும்.




இதுபோல் மற்ற (ஙய) பிரயோகங்களுக்கு பூஜா விதி செய்து ஒவ்வொரு பிரயோகத்திற்கும் 1008 உருச் செபித்து முடிக்கச் சித்தியாகும். இவைகளின் பலிதம் வாக்குப் பலிதம் பராசக்தி சித்தியுண்டாகும்.


- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தெரிசனம்




தோராத வட்ட முற்கோண சற்கோண துலங்குவட்ட
தீராறிதழிட்டு நிங்நார முள்ளிட்டு இதன் நடுவில்
ஆராதனை செய்தருச்சித்துப் பூசித்தடிபணிந்தால்,
வாராதிரள்ளல்லோ வாலை ஞான வராகியுமே.

## மூலமந்திரம்

ஓம் தீம் ரீம் சீம் வீம் அம் திரிபுவனேஸ்பரிவராகி வாவா வந்தென் வாக்கில் நிற்க வேசுவாகா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
## தம்பனம்


மெச்சிரத்திற் பணியார் மனங்காய மிகவெகுண்டு.
கைச் சிரத்தேந்திப் புலாலினநாறக் கடித்துதறி
வச்சிரத்தந்த முகப்பணியாற்குத்திவாய் கடித்துப்
பச்சிரத்தங்குடிப்பாளே வராகி பகைஞ்ஞரையே

மூலமந்திரம்: ஆங் சீங் வாங் ஆம் ஈம் பரமேஸ்வரியே சுவாகா




## மோகனம்

படிக்கும் பெரும் புகழ்ப் பஞ்சமி என்பர் பகைஞ்ஞர் தமை
யடிக்கும் இரும்புத்தடி கொண்டு பேய்கள் அவர் குருதி
குடிக்கும் குடர் கொண்டு தோண்மாலையிட்டு குலாவுமன்றில்
நடிக்கும் வராகி பதினாலு உலகமு நடிங்கிடவே




மூலமந்திரம் : இம்டங்ஹம் கங்பரமேஸ்பரியே சுவாகா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்ருடணம்

நடுங்காவகையன் பர்நெஞ்சினிற்புக்கவர் நண்ணலரைக்
கொடுங்காளி உண்ணக் கொடுக்குங் குருதிகள் கொப்பளித்
திடும் பாரக் கொங்கையின் மீதே இரத்தத் திலகமிடும்
தொடுங்கார் மனோன்மணி வராகி நீலி தொழிலிதுவே.


**மூலமந்திரம் :** ஓம் யம் சிம்வசி பரமேஸ்பரியே சுவாகா




## உச்சாடனம்

வேய்குலமன்னதிண்டோளாள்வராகி தன் மெய்யன்பரைத்
நோய்க்குலமென்ன இடும்புசெய்வார் தலைநொய் தழித்துப்
பேய்க்குலமுண்ணப் பலிகொண்டு போட்டுப் பிணக்குடலை
நாய்குலங் கௌவ்வக் கொடுப்பாள் வராகி என் நாராணியே.





**மூலமந்திரம் :** நாம், மாம்.ஸ்ரீஹம்.பரமேஸ்வரியே சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதமாறணம்


நாசப்படுவர் நடுங்கப்படுவர். நமன் கயிற்றால்
வீசப்படுவர் வினையும் படுவார் இம்மேதினியோர்
ஏசப்படுவர் யிகளப்படுவர் என் ஏழை நெஞ்சே
வாசப் புதுமலர் தோளாள் வராகியை வாழ்த்திலரே.




**மூலமந்திரம் :** ஆம்.சீம்.ரீம்.ஊங்.சிவா.ஓஹம்.பரமேஸ்வரியே சுவாகா

## வசியம்

வாலை திரிபுரை மூன்றும் மிவ் வையகத்தில்
காலையு மாலையு முச்சியுமாக எக்காலத்திலும்
ஆலைய மெய்தி வராகி தன் பாதத்தை அன்பிலுன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே




**மூலமந்திரம் :** வங்சிங்.யங்.உங்.ஓஹம் பரமேஸ்வரியே சுவாகா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சத்துருமாறணம்


தஞ்சமுன் பாதம் சரணா கெதி என்று சார்த்தவர் மேல்
வஞ்சனை பில்லி கொடி தேவல் சூனியம் வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நிணக்குடல்வாங்கி நெருப்பிலிட்டு
டஞ்சக்கரம் கொண்டறுப்பாள் திரிபுரையானந்தியே.



**மூலமந்திரம் :** பஹம்.மஹம்.சிஹம்.வஹம்.கஹம்.பராசக்தி சுவாகா

## சத்துருவசியமாரணம்

அலைபட்டு நெஞ்சமலைந்துயிர் சோரவலக்கையிடக்கை
கொலைபட்டுடலங் கழுகுகள் சூழ குருதிபொங்கி
தலைகெட்டுடலம் வேறாய்ப் பதைபபுற்றுச் சாவர்கண்டீர்.
நிலைபெற்ற நேமிப்படையாளை நினையாதவரே




**மூலமந்திரம் :** ஓம் கிலியும் சிவாய நம




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மோகன உச்சாடனம்


வீற்றிருப்பாள் நவகோணத்திலே அம்மை வேண்டுமென்று
காத்திருப்பாள் கலி வந்தணுகாமல் என் கண்கலக்கம்
பார்த்திருப்பாள் அல்லலெங்கே என்றங்குச பாங்கையில்
கோத்திருப்பாள் இவளே என்னை ஆளும் குலதெய்வமே




**மூலமந்திரம் :** மோஹம்.வோஹம்.யோஹம்.ஊஹம். பரமேஸ்வரியே சுவாகா

## பூத உச்சாடனம்

சிவஞான போதகி செங்கைக்கபாலி திகம்பரிசற்
றவமாகும் மெய்அன்பர்க்கேயிடர் சூழுந்தரியலரை
யவமானஞ்செய்யுங்கணங்களை யேவும கோரியிங்கு
நவமாக வந்தென்னைக் காக்கும் திரிபுரை நாயகியே





**மூலமந்திரம் :** ஓஹம்.நங்.சிங்.நமசிவய நசிமசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்து வேடனம்


வருந்திப்பகைத்தரென்னோடறியாமன் முன்வானவர்க்காய்ச்
சிரித்துப் புரமெரித்தோன்வாமபாகத்து தேவி எங்கள்
கருத்திற் பயிலும் வராகி யெம் பஞ்சமி கண் சிவந்தால்
பருந்திப் பொதிக்கிட்ட தீப்பொறி காணும் பகைத்தவர்கே




மூலமந்திரம் :
ஊங்.சீங்.ரீங்.ஆங்.உம்.படு
சுவாஹா

## மாரணம்

பாடுபட்ட செந்தமிழ்ப் பாவாணர் நின்மலர் பாதம் தன்னில்
பூப்பட்டதுவும் பொறிபட்டதோ நின்னையே புகழ்ந்து நிதம்
கூப்பிட்டதுன்செவி கேட்கிலையோ அண்டகோளமட்டும்
தீப்பட்டதோபட்டதோநித்தனையாளர் தெருவெங்குமே



மூலமந்திரம் :
ஆம்.ஊம்.ஈம்,காம்.
சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிலைமாரணம்


எங்கும் எரியக் கிரிகள் பொடிபடஎம்பகைஞ்ஞர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழிந்திட வார்தெழுந்து
பொங்கும் கடல்கள் சுவறிடச் சூலத்தை போகவிட்டுத்
சிங்கத்தின் மீது வருவாள் வராகி சிவசக்தியே




**மூலமந்திரம் :** சங்வங்அம்உம் பரமேஸ்வரியே சுவாஹா

## சத்துருமாரணம்

சக்தி கெவுரி மக மாயி ஆயி என் சத்துருவை
குத்தி இரணக்குடலைப் பிடுங்கி குலாவிநின்றே
எத்திசை எங்கும் நடுங்க கிரிகள் இடிபடவே
நித்தம் நடித்து வருவாள் வராகி என் நெஞ்சகத்தே




**மூலமந்திரம் :**
சஹம்.சிஹம்நஹம்.டஹம்
சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தேவி ஆக்ருஷணம்


ஐயும் கிலியுமெனத் தொண்டர் போற்ற அரிய பச்சை
மெய்யும் கருணை வழிந்தோடுகின்ற விழியு மலர்க்
கையும் பிரம்பும் கபாலமும் சூலமும் கண்ணெதிரே
வையந்துதிக்க வருவாள் வராகி மலர்க்கொடியே.




**மூலமந்திரம் :**
வசிய நம நம் நமசிங்
சிங் ஓம் சுவாஹா

## சத்துரு மாறணம்

தாளும் மனமும் தலையும் குலையத் தரியலர்கள்
மாளும் படிக்கு வரந் தருவாய் யுனை வாழ்த்து அன்பர்க்
கோளும் பகையுங் குறியார்கள் வெற்றி குறித்த சங்கும்
வாளும் கடகமும் சூலமும் ஏந்தி வருந்துணையே




**மூலமந்திரம் :**
நம்மம்சிம்வம்யம்
ஆங்.ங்வங்.யங்உம்.படு
சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## லோகமாரணம்


வருந்துணை என்று வராகி என் அன்னையை வாழ்த்தி நித்தம்
பொருத்தும் தகைமையைப் பூணாதவர்தம் புலாலுடலை
பருந்தும் கழுகும் பூதமும் வெய்யப் பசாசுகளும் -
விருந்துண்ணப்பட்டு கிடப்பர் கண்டாய் உடல் வேறுபட்டே





**மூலமந்திரம் :**
ஐயும் கிலியும் ரீயும் பரமேஸ்வரியே
சகல சத்துருக்களையும் மசி
சுவாஹா

## ஏவல் சத்துரு மாரணம்

வேறாக்கும் நெஞ்சும் வினையும் வெவ்வேறுவெகுண்டுடலம்
கூறாக்கும் நெஞ்சத்தில் சென்றிறமானகுருதிபொங்கச்
சேறாக்கும் குங்குமக் கொங்கையிற் பூசித்திலகமிடும்
மாறாக்கு நேமிப்படையாளை வணங்காதவர்க்கே




**மூலமந்திரம் :**
ஓஹம்நங்சிங்நசிமசி
சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பூதமாறணம்


நெஞ்சகந்தன்னில் நிறைந்திருக்கின்ற நிர்க்குணத்தி
நஞ்சணி கண்டத்தி நராயணி தன்னை நம்புவர்க்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேரை வாணாளை உண்ணக்
கொஞ்சி நடந்துவருவாள் வராகி குலதெய்வமே




**மூலமந்திரம் :**
வம்சிம்யம்.நங்ஹம்நங்ஹம்
நங்ஹம்நங்ஹம்.
பரமேஸ்வரியே
ஸ்வாஹா

## எதிரிமாறணம்

மதுமாமிசம் தனைத்தின்பாள் இவளென்று மாமறையோர்
அதுவே உதாசினம் செய்திடுவாரந்த அற்பர்கடன்
கதிர்வாய் அடைத்திட உள்ளம் கலங்க கடிதடித்து
விதிர்வாளில் வெட்டி எறிவாள் வராகி என் மெய்த்தெய்வமே




**மூலமந்திரம் :**
பேஹம்.மேஹம்.யேஹம்.வேஹம்.
பரமேஸ்வரி சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மிருகமாரணம்


பாடகச் சீறடிப் பஞ்சமி என்பர் பகைஞ்ர் தமை
ஓட விட்டே கை உலக்கை கொண்டெறி உதிரமெல்லாம்
கோடகத்திட்டுவடித்தெடுத்து தூற்குடிக்குமெங்கள்
ஆடகக்கும்பமுலைக்கொங்கையாள் எங்கள் அம்பிகையே




**மூலமந்திரம் :** ஓம்ஹறம்.அங்.யங்.எங்.ஓம்நமசிவய நசிமசி

## பாவமாரணம்

தாமக்குழலும் குழையும் பொன்னோலையும் தாமரைப் பூஞ்
சேமக்கழலும் துதிக்கவந்தோர்க்குச் செகமதனில்
வாமக் காளக் களத்தம்மை யாதி வராகி வந்து
தீமைப் பலத்தைத் தடுத்தாண்டு கொள்வாள் சிவசக்தியே




**மூலமந்திரம் :** ஓம்ஹறம்.மங்ஹறம்.கிங்ஹறம்.சிவயநம




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சத்துருமாரணம்


ஆராகிலுநமக் கேவினை செய்யின் அவர்ருடலம்
கூரானவாளுக்கிரையிடுவாள் கொன்றை வேணியரன்
சீரார் கமலத் தடியினை சேரும் திரிபுரையாள்
வராகி வந்து குடியிருந்தாள் என்னை வாழ்விக்கவே




**மூலமந்திரம் :**
ஓம்ஹறம்.அங்.உங்.கிங்.நங்.
நமசிவய சுவாஹா

## பசாசு மரணம்

தரிப்பாள் கலப்பை என்னம்மை வராகி என் சத்துருவை
பொரிப்பாள் பொரி எழச் செந்தீயிலிட்டு பொரித்ததலை
நெரிப்பாள் தலைமண்டை மூளையைத் தின்று பின் நெட்டுடலை
உரிப்பாள் படுக்கை விரிப்பாள் சுக்கா. உவர்த்துவளளே





**மூலமந்திரம் :**
நங்ஹறம்.மங்ஹறம்.
சிங்ஹறம்.வங்ஹறம்.யங்ஹறம்.
பராசக்தியே சுவாஹா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ
## எதிரி மாறணம்

ஊராகிலும் முடனாகிலுமவர்க் குற்றவரோடாராகிலும்
நமகாற்றுவரோவட வாழியுண்டு காரார் கனத்த
உலக்கையுமுண்டு கலப்பையுண்டு
வராகி என்னும் சண்டப்பிற சண்டவடிவியுண்டே





**மூலமந்திரம் :** ஓங்ஹம்யம்சிம்நமசிவய சுவாஹா

## சேனை மாறணம்

உலக்கை கலப்பை ஒளிவிடுவாள் கடகாளி சங்கம்
வலக்கை இடக்கையில் வைத்த வராகி என் மாற்றலர்கள்
இலக்கமில்லாத எழில் பெருஞ்சேனை எதிர்வரினினும்
விலக்க வல்லாளொரு மெல்லிதன்பாதம் விரும்புகவே





**மூலமந்திரம் :**
உங்ஹம்யிங்ஹம்உங்ஹம்-
பரமேஸ்வரி
சுவாஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறிட்ட நின்பாதார விந்தத்தை சிந்தை செய்து
நீறிட்டவர்க்கு வினைவருமோ நின்னடியவர்பால்
மாறிட்டவர் தம்மை வாளாயும் கொண்டு வாட்டி இரு
கூறிட்டெறியவருவாள் வராகி எனும் மெய்த் தெய்வமமே




ஓம், நமோ பகவதே பால மோஹினி த்ரி
புவனேஸ்வரீ சிங்சிங் வங்,வங் ஹும் பட்
சுவாஹா உரு *1008*

வராகிமாலை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பரமபதி துணை

கௌசிகர் திருவாய் மலர்ந்தருளிய

# மாந்திராரூட வாக்கியம்

## மந்திர சக்கரங்களுடன்

**வினாயகர் மூல மந்திர தியானம்**

விபூதியில் ஓங்காரம் போட்டு அதனுள் வங். சிங். கங். என்ற அட்சரம் மிட்டு சூடதீப ஆராதனை கொடுத்து இந்த மந்திரத்தால் உருச்செபித்து வர வினாயகர் வசியமாவார் - அப்பால் விபூதியை அணிந்து கொள்ள சகல வசியமுண்டாம்.

**பிரம தியானம்**

விபூதியால் நாற் கோணமிட்டு அதனுள் வட்டமிட்டு அதன் மத்தியில் ஓங்காரமிட்டு அதனுள் நம்.நங்.கிலிரிங் என்று அட்சரமிட்டு இந்த மந்திரத்தினால் (108) உருப்போட்டு செபிக்க பிரமதெரிசனமாவதுடன் புத்திர சந்தானமுண்டாம்.

**விஸ்னு தியானம்**

விபூதியில் மூன்றாம் பிறைபோல் முக்கோணமிட்டு அதனுள் வட்டமிட்டு அதனுள் ஓங்காரமிட்டு அதனுள். மங்மங்.சீரிங்ரீம்.சிம் என்று எழுதி சக்கரத்தைப் பார்த்துக் கொண்டே ஓம் சிரீம்ரீம்சிம்.மங் சுவாகா என்று (108) உருப்போட்டுத் தியானிக்க விஸ்னு தெரிசனையாவதுடன் சகலபாக்கியமுண்டாம்.

**உருத்திரர் தியானம்**

விபூதியில் முக்கோணமிட்டு அதனுள் வட்டமிட்டு அதன் நடுவில் சிரி.சிம்.கிலீ என்று எழுதி அதைப்பார்த்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்.சிம்.கிலீ.சிறியும்.சுவாஹா வென்று (108) உருத்தியானிக்க உருத்திரர் செரிசனமாகும் சகல பீடைகளும் விலகும்.

**மகேஸ்பரர் தியானம்**

விபூதியில் அறுகோணமிட்டு அதனுள் சரஹபவ என்று மேலே எழுதி நடுவில் ஐயுங் கிலியும் சவ்வும் என வரைந்து சக்கரத்தைப் பார்த்துக் கொண்டே லும்ஐயும் கிலியும் சவ்வும் சரஹணபவா. சுவாகா வென்று தியானித்து (108) உருப்போட மகேஸ்பரர் தெரிசனையுண்டாகும் சகல வியாதிகளும் நிவாரணமாகும்.

**சதாசிவ தியானம்**

விபூதியில் வட்டமிட்டு அதன் நடுவில் ஓங்காம் போட்டு அதன் மத்தியில் அந்த ஓங்கார மத்தியில் ஓம் யங்றங்சிம்சிம் என வரைந்து அச்சக்கரத்தைப் பார்த்துக் கொண்டே மேற்குறிப்பிடும் மந்திரத்தால் (108) உருச்செபிக்க சதாசிவ தெரிசனையாகும் சகல பீடைகளும் நீங்கி நிவாரணமாகும்.

## தேவ வசியங்கள்

வெள்ளிக்கிழமைகளில் சுத்தமான அறையில் பால் பழம், சர்க்கரைப் பொங்கல், புஷ்பம், சூடம், வத்தி முதலியவைகளால் சத்தி பூஜை செய்து கீழ்க்கண்ட மூலமந்திரங்களால் ஜெபித்து 48 நாள் நாள் செய்ய வேண்டியது. இப்படி செய்தால் சித்தியாகும்.

**மூலமந்திரம்:** அம் அம் றீம் உம் யிம் வசி சுவாஹா

**பலன்:** பூஜை செய்த விபூதியணிந்து மேற்படி புஷ்பத்தை அணிந்து கொண்டால் சகல தேவர்களும் வசியமாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லஷ்மி வசியம்**

கிரமப்படி வெள்ளிக்கிழமைகளில் சத்தி பூஜை செய்து, கீழக்கண்ட மூலமந்திரம் 48 நாள் செய்து வசியம் செய்யவும்.

**மூலமந்திரம்:** ஓம் ஸ்ரீ லக்ஷ்மிதேவி வசி வசி சுவாஹா
பலன்: இதனால் சகலமும் சித்தியாகும் லக்ஷ்மி கடாக்ஷமுண்டு.

**சரஸ்வதி வசியம்**

வெள்ளிக்கிழமைகளில் சுத்தமாக பூஜை அறையில் சத்திபூஜை செய்து, கீழ்க்கண்ட மூலமந்திரங்களை 1008 உரு ஜெபிக்கச் சித்தியாகும்.

**மூலமந்திரம்:** ஓம் ஹீம் வாணிதேவி வாவா சுவாஹா
பலன்: இதனால் கல்வி விருத்தியாகும். சங்கீதம் பயில முக்கியமானது.

**கௌரி வசியம்**

திங்கள், வெள்ளிக்கிழமைகளில சுத்தமான பூஜை அறையில் சத்தி பூஜைக்குத் தேவையான பால், பழம், புஷ்பம், வத்தி வெற்றிலை பாக்கு, சூடம், தேங்காய், சர்க்கரை, சர்க்கரைப் பொங்கல் மஞ்சள் குங்குமம், சீப்பு சிமில் கரிவளையல் முதலியவைகளைக் கொண்டு வந்து ஏகனத்துடன் பூஜை முடித்து கீழ்க் கண்ட மூலமந்திரங்கள் 1008 உரு ஜெபிக்க சித்தியாகும்.

**மூலமந்திரம்:** ஓம் சத்தி ஆதிகௌரி தேவி வாவா சுவாஹா.
பலன்: இதனால் சகல கஷ்டங்கள் விலகும். கல்வி வளரும். பக்தி சொரியும், லக்ஷ்மி கடாக்ஷமாகும். உலகமே வசியமாகும்.

**சத்தி வசியம்**

பூச நக்ஷத்திரமும் வெள்ளிக்கிழமையும் வரும் சுப தினத்தில், கிரந்தி செடிக்கு காப்பு கட்டி பொங்கல் பலி தூபதீப நைவேத்தியஞ் செய்து, சாப நிவர்த்தி செய்து வேரறாமல் பிடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து குளிசமாடி பூஜையில் வைத்து வெள்ளை புஷ்பத்தினால் சத்தியை அலங்காரஞ் செய்து கீழ்க்கண்ட மூலமந்திரத்தை 1008 உரு ஜெபித்து குளிசத்தையெடுத்து கட்டிக் கொள்ளவும்.

**மூலமந்திரம்:** ஓம், இம், உம், ரம், ரங், சிங், ஆயி டாகினி மாகினி விஷ்ணு சகோதரி சர்வாணி தேவி பராசக்தி நமசி சுவாஹா
**பலன்:** ஏவல் சூனியம், பேய், பிசாசு, பூதம் எல்லாம் விலகும்.

## மஹா சத்தி வசியம்

அமாவாசையும் ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்த தினத்தில் ஒண்டி மூலிகை என்னும் செடிக்கு மங்கையர் நூல் காப்பு கட்டி பொங்கல் பலி தூபதீபம் கொடுத்து சாப நிவர்த்தி செய்து வேரைப் பிடுங்கி வந்து இரும்பாலாகிய ஆயுதம் பிடித்துக் கொண்டு வந்து குளிசமாடி பூஜையில் வைத்து கீழ்க்கண்ட மந்திரத்தை 1008 உரு ஜெபித்து குளிசத்தை கட்டிக் கொள்ள வேண்டியது.

## மாந்திரீக ஆசான்

**மூலமந்திரம்:** ஓம், ரீம், சிங், வங், மகமாயி ஆயிபத்திர மஹா சத்தி நவசத்தி சர்வாணீ ஓம் வசி சுவாஹா
**பலன்:** இதனால் சகல விதமான மந்திரங்களும் பில்லி சூனியம் ஏவல் பேய் பிசாசு முதலியவைகள் நாடாது
இது ஆசானருளின்றி அமையாதொரு நாளும்"

### காளி வசியம்

வெள்ளிக்கிழமைகளில் பயபக்தி விநயத்துடன் பூஜை முடித்து கீழக்கண்ட மூலமந்திரத்தை லக்ஷத்தியெட்டு உரு ஜெபிக்கவும்.

**மூலமந்திரம்:** ஓம் அரிகாளி, ஓடி காளி, சூலக பால காளி, பூமிகாளி, மோடி காளி, மந்தரமாகாளி, ஓம் ஆம், கோதண்ட ரூபி, அம்மணி, ஆளிவதாகத் தேரிடுங்காளி, ஆங்கார ஓங்கார காளி வாவா.
**பலன்:** ஜெபித்துக் கொண்டு வந்தால், அம்மணி ஸ்ரீ மாகாளி தேவியானவள் பிரசன்னமாகி கேட்கும் வரத்தைக் கொடுத்துக் கடாக்ஷிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## சக்கரங்கள் செய்து பூசிப்பதற்கு தகடு செய்யும் அளவு

தங்கம் வெள்ளி செம்பு இம்மூன்று விதமான எதுவொன்றினாலும் எடுத்து மூன்றங்குல நீளமும் மூன்றங்குல அகலமும் உள்ள தகட்டை எடுத்து மந்திர சக்கரங்கள் வரைந்து பூசை செபித்து தாயத்தில் அடைத்து புருடர்க்கு வலக்கையிலும் இடுப்பிலாவது போட்டுக் கொள்ளவும்.

**மந்திர சக்கரம் சித்தி செய்து கொள்ளும் நாள்**

சூரிய கிரணம் சந்திரகிரணம் ஆகிய நேரங்களிலும் அமாவாசையும் கார்த்திகையும் ஒன்று சேர்ந்த மாதம்களிலும் ஞாயிறு திங்கள் வியாழன் வெள்ளிக் கிழமைகளிலும் மந்திராரம்பஞ் செய்து கொள்ளச் சித்தியாகும்.

**மந்திரஞ் செபிக்குமிடம்**

மடம், நந்தவனம் பூஞ்சோலை பெண்கள் வாசமில்லாத வீடு இரவில் படுத்துக் கொள்ள சாகை இல்லாத இடங்களிலும் மழை நனையாத இடத்திலும் நாலடி நீள அகலம் சுத்தம் செய்து மெளுக்கிட்டு காயவைத்துக் கொள்ளவும்.

**மந்திரஞ் செபிக்க ஆசன விதி**

புலித்தோல் மான்தோல் தெற்பை பலகை எந்த ஆசனமாவது போட்டு ஸ்நானம் ஆடி புதுவஸ்திரம் தரித்து விபூதிதரித்து சிவமாலை உருத்திரம் முத்து துளசி எடுத்து கையிற் பிடித்துக் கொள்ளவும்.

**மஞ்சள் பிள்ளையார்வைக்குமுறை**

எருக்கிலை வேர்ப் பிள்ளையார் மஞ்சல் பிள்ளையார் சாணிப் பிள்ளையார் எந்தப் பிள்ளையாராவது இதில் எடுத்து ஒரு பிள்ளையாரை கிழக்கு முகமாக வைத்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்திரத் தகட்டு முறை**

தங்கம் வெள்ளி செம்பு ஐம்பொன் எதுயாவை ஒன்றை எடுத்து மந்திரங்களை எழுதி முடித்து அதற்கு மஞ்சள் சந்தணம் தேன் பால் இளநீர் முதலி தானவைகளால் அபிசேகம் செய்து பிள்ளையார் அருகில் வைக்க வேண்டியது

**பூசை விதி**

பிள்ளையாருக்கு முன்பாக இலை விரித்து அதில் பச்சை அரிசி கொட்டி அதன் மேல் செம்பு நிறைய தண்ணீர் ஊற்றி, மாவிலை வைத்து தேங்காய் முடியோடு வைத்து கும்பவஸ்திரம் சுற்றி அரிசி மேல் வைத்து நாலு திக்கும் நாலு தேங்காய் உடைத்து எட்டுப் பழம் வைத்து அதன் மத்தியிலில் அவல், கடலை, சக்கரை கலந்து பரப்பி பால், வெற்றிலை, பாக்கு வைத்து சிறு தாம்பாழத்தில் விபூதி போட்டு மேற் கற்பூரம் வைத்து தீபதூபம் காட்டி, பிள்ளையார் எந்திரம் இரண்டிற்கும் பூஸ்பம் சாற்றி செவ்வளரி அல்லது வெள்ளைப் புஸ்பத்திலை 1008 பூவெடுத்து வைத்துக் கொண்டு தீபம் காட்டி எந்த மந்திரம் செபிக்க வேண்டுமோ அந்த மந்திரத்தை செபிக்கக் கணக்கிட்டு தினம் ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உரு வீதம் ஐம்பதாயிரம் உருச் செபிக்க வேண்டியது மறுநாள் ஒரு பழமும் சாம்பிராணியும் வைத்துக் கொள்ள வேண்டியது.

**பூசை விதி முடிவு**

இப்படி ஐம்பதாயிரம் ஒரு முடிவு நாளில் மேற்கண்ட பிரகாரம் தேங்காய், பழம், பாயாசம் வைத்து அதில் நாலு பரதேசிகளுக்கு அன்னம் கொடுத்து தானும் விரதமிட்டு எந்திரத்தை எடுத்து தாயத்து செய்து இடுப்பில் கட்டிக் கொள்ள மந்திரம் சித்தியாகும் கும்ப நீரை அரசமரத்தடியில் கொட்டி விடவும். பச்சரியை பரதேசிகளுக்கு கொடுத்து விடவும். மற்றக் கனிவர்க்கங்களை யாவரும் சாப்பிடவும் பூசை முடியும் வரை ஒரு வேளைப் போசனமும் இரவில் பால் பழம் சாப்பிடவும் இவ்விதிமுறைகள் பூசை முடிவுவரை இருக்க வேண்டியது.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயப் பெருமான் உபாசனா விதி

பூவுலகில் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய எல்லா விதமான தோஷங்களும் தொல்லைகளும் அகன்று மன நிம்மதியும், வாழ்கை இன்பமும் அமைய வழி வகுத்து அருளுபவர் வினாயகமூர்த்தி ஆவார்.

எந்த தெய்வத்தையும் வழிபடுவதற்கு முன்னால் விக்னேஸ்வரரை உபாசனை செய்து வழிபடுவது மரபு.

விடியற்காலையில் சூரியன் உதயமாவதற்கு முன்னால் எழுந்து காலைக்கடன்களை முடித்து நல்ல நீரில் நீராடி பட்டு வஸ்திரம், அல்லது நார்மடி வஸ்திரத்தை அரையில் உடுத்திக் கொள்ள வேண்டும்.

பிறகு விபூதி அணிந்து அனுஷ்டானம் முதலியவற்றை முடித்து பரிசுத்தமான இடத்தில் தன்னந்தனியாக பத்மாசனமிட்டு அமரவேண்டும். மனத்தை அலையவிடாமல் வசப்படுத்தி அடியில் தரப்பட்டிருக்கும் சக்கரத்தை எழுதி பூஜையில் வைத்து தூபதீபம் கொடுக்க வேண்டும். பிறகு விக்னேஸ்வரர் மூல மந்திரத்தை செபிக்க வேண்டும்.

**மூல மந்திரம் வருமாறு:**


ஓங் றீங் அங் உங் சிங் கணதேவாய நம:
சகல துரித பூத வாதைகளும் நசிமசி:

மேற்சொன்ன விக்னேஸ்வரர் மந்திரத்தை 1008 முறை மன ஒருமைப்பாட்டுடன் செபிக்க சகல விதமான தொல்லை தொந்தரவுகளும் விலகி காரிய சித்தி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோய்கள் அகல**




உள்ளங்கையில் ஒரு வெற்றிலை அல்லது விபூதி பரப்பி அதில் விக்னேஸ்வர சக்கரத்தை ஐங்கோணமாய்க் கீறி அதில் பீஜாக்ஷரங்களை வரைந்து அதைச் சுற்றிலும் ஓங்காரத்தைப் போட்டு மூலமந்திரஞ் செபிக்க சகல விதமான பிணிகளும் அகன்று விடும். நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றி பெறும்.

**பல வித தோஷங்கள் அகல**

பெரியவர்களுக்கும், குழந்தைகளும், ஏற்படுகிற காரணமில்லாதபயம், காத்து, கருப்பு போன்ற துர்தேவதைகளால் ஏற்படக்கூடிய தோஷங்கள், இந்த தோஷம் காரணமாக ஏற்படக்-கூடிய காய்ச்சல், சிரசில் உண்டாகக் கூடிய செவ்வாப்பூகட்டிகள் மற்றும் சிரசு தொடர்பான ரோகங்கள், இழுப்பு, வலிப்பு போன்ற நரம்பு தொடர்பான நோய்கள் அகலுவதற்கு கணபதி மூலமந்திர உபாசனை ஒன்று நடத்த வேண்டும்.

இதற்கான பூசனா விவரம் வருமாறு: செப்பு அல்லது மண் கலத்தில் சுத்தமான நீரை நிரப்ப வேண்டும்.

அதில் மாவிலை கொத்து போட்டு, கும்ப வஸ்திரம் கட்டி மஞ்சள், குங்குமம் அட்சதை போட்டு அதில் தாம்பூலம், பழம் தேங்காய், சந்தனம், மலர் சாத்தி கற்பூரம் சாம்பிராணி இவற்றைக் கொண்டு தூபதீபம் கொடுத்து வழிபாடு நடத்தவேண்டும்

வழிபாடு நிறைவேற்றிய பிறகு கண்களை மூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை ஒரு நிலைப்படுத்தி கீழ்க்கண்ட கணபதி மூல மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.

**கணபதி மூல மந்திரம்**

ஓம் நமோ பகவதே ஐயும் கிலியும் சவ்வும் கணபதி வசிவசி சுவாகா.


**மற்றவர்களால் ஏற்படும் சங்கடங்கள்**

சில சமயம் விரோதம், துவேஷம் காரணமாகவோ பொறாமை, பொச்சரிப்பு போன்ற உணர்வுகள் காரணமாகவோ சிலர் நமக்கு, நாம் அறிந்தும் அறியாமலும் பலவிதமான சங்கடங்களை பல்வேறு வழிகளில் நம்மீது ஏவி விடுவார்கள். இத்தகைய தொந்தரவுகளை முற்றிலுமாக அகற்றி மன நிம்மதி பெறுவதற்கு வேறு விதமான விக்னேஸ்வரர் மந்திரத்தை உபசானை செய்யவேண்டும்.

உதய காலத்தில் எழுந்து நதியில் நீராடி பட்டு வஸ்திரம் அணிந்து விபூதி தரித்துக் கொள்ள வேண்டும்.

பிறகு மாம்பலகை ஆசனத்தில் கிழக்கு முகமாக தனியாக அமர வேண்டும்.

அடுத்து, பின்வரும் சக்கரத்தை தங்கத் தகட்டில் அல்லது தாமிரத்தகட்டில் எழுதி தூபதீபம் கட்டி இதற்கான மூலமந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.




ஓம் நமோ தசாக்ஷர மந்திராய மூஷிகவாகனாய ஐயும் கிலியும் சௌவும் ஆ--ஊ--மகாகணபதி எனக்கு வசமாக சுவாகா.

இந்த மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சரவணபவன் உபாசன மந்திரம்

ஓம் நமோ நமசிவமாயம் மயில் வாகனா பாலசுப்ரமண்யா ஐயும் கிலியும் சரஹணபவா மமவசிமசி சுவாக.


### ஸ்ரீ சண்முக மூல மந்திரம்

ஓம் பகவதி புத்திரா- வேலாயுதா வேகமாய் வந்தேன் முன் மனோசுபீஷ்சம் சாதிக்க சரஹணபவா--ஓம் ஐயும்கிலியும் ஸ்ரீம் சண்முக தேவா வசிமசி சுவாகா.

### உபாசனா மந்திர சக்கரம்

மந்திரத்தை உற்சாடனம் செய்யும் போது உபாசனா ஸ்ரீசக்கரத்தை முறைப்படி தயாரித்து பூஜையில் வைத்தால் மிகச் சிறப்பான பலன் கிடைக்ககும்.

ஸ்ரீ சக்கரத்தை கீழ்க்கண்ட விதமாக தயாரிக்க வேண்டும்.




6அங்குல அகலம், 6அங்குல நீளமுள்ள சந்தனப் பலகையை கீழே குறிப்பிட்டிருக்கும் சக்கரம் போல அறுகோணம் கீறி மத்தியில் ஸ்ரீ சத்தியும், ஆறு வீடுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணபவ என்று ஆறு எழுத்தையும் அடக்கி அறு கோணத்து நுனியில் ஸ்ரீ என்ற எழுத்தை ஆறுக்கும் எழுதி, அறு கோணத்துக்கு வெளியில் சௌக்கமன வீடு சுற்றில் வரைக் கீறி அதற்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு வாசல்களை விட்டு அவைகளில் ஸ்ரீ என்ற எழுத்தை எழுதி சக்கரத்தை முடிக்கவேண்டும்.


1008முறை மந்திர உச்சாடனம் செய்யும்போது ஒவ்வொரு தடவையும் வெள்ளை மலரைக் கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டும்.

**பிறரை வசியம் செய்ய ஐந்தெழுத்து மந்திரம்.**

அவசியத்தை முன்னிட்டு மனித வசியம் செய்ய வேண்டிய நிலை சில சமயம் ஏற்படும் நமது ஜென்ம விரோதிகளை வசியப் படுத்தவும், சிலரிடம் அவசியமான காரியங்களை சாதித்துக் கொள்ளவும், நாம் விரும்பும் பெண் அல்லது ஆணை நம் வயப்படுத்தவும், வசிய மந்திரத்தை பிரயோகித்து பயன் பெற முடியும்

நாம் மேற்கொண்டுள்ள பெரிய முயற்சிகள் எந்த வித இடையூறும் இல்லாமால் நிறைவேறவும் வசிய மந்திரத்தை பிரயோகிக்க வேண்டியிருக்கும்.

ஐந்தெழுத்து(சடாசக்ஷர) மந்திரத்தை உற்சாடனம் செய்யும்முன் மூலமந்திரத்தை வில்வப் பலகையில் வரைந்து எழுத்துக்களை அடக்கி பூஜையில் வைத்து கீழ்க்கண்ட மூல மந்திரத்தை உத்திராட்ச மணிவடத்தின் துணையுடன் 1008 முறை உற்சாடனம் செய்யவேண்டும்.





மூலம்: சிவநம நசிமசி சகல பில்லி சூனியம் தலைவிரித்தோட சங்.றீங். சிவ்.மவ் ஓாவா சரவணபவனே சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்தில் லெட்சுமிகரமுண்டாக மந்திர சக்கரம்




இந்த சக்கரத்தை முன்னதாகவே கோவில்-களிலிருந்து பூஜாவிதி முறைப்படி பதினாயிரம் உருப்போட்டு சித்தி செய்து கொண்ட பின்பு மந்திர ஆரம்பஞ் செய்யவேண்டியது ஏந்திரத்தை பூசையில் வைத்து பூஜா விதி முறைப்படி தேங்காய் பழம் புஸ்ப்பம் கூடம், சாம்பிராணி, தூபம் கொடுத்து வெண்மையான புஸ்பத்தினா் ஹிரிஓம் திரிபுரபவா திகனொளி பவா, பொழிபவர் பரிபுரபவா சர்வ ஷண பவா சயமொழிபவா தேவாயநமா என்று 1008 உரு போட்டு தங்க அரக்கூட்டில் அடைத்து கழுத்திலாவது இடுப்பிலாவது கட்டிக்கொள்ள எந்த கோளாறுகளிலிருந்தாலும் நீங்கும். லெட்சுமி கரம் முகத்திலுண்டாகும்.




இந்த சக்கரத்தை முன்னதாகவே ஆலயங்களில் பதினாயிரம் உருப்போட்டு சித்த செய்து கொண்ட பின்பு மந்திரம் செபிப்பவனை வசியமாகும்.

ஓம் கிறீங் ஐயும் திரபுரவரி நம
ஓம் கிறீங் கிலீங் ஆந்த பரப்பிரம் சொருபஜயே நம
ஓம் கிறீங் சவ்வும் திருவருள் புரிஞானவாய் பரமேஸ்வரி நம
ஓம் கிறீங் ஆனந்தவாலமாகாளி பரமேஸ்வரியே
நான் நினைத்து கருதின சறுவசன இஸ்திரி புருசரும்
என் வசம்மாக வருக சிவகா ஆகுவாவா சுவாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தேவதா வசியமந்திரசக்கரம்




### பூசை விதி

செம்பு தகட்டில் இந்த அட்சரம் போல் எழுதி பூசையில் வைத்து பூஜா விதிப்படி தேங்காய், பழம், புஸ்பம், சூடம், சாம்பிராணி, தீபதூபம் காட்டவும்.

### மூல மந்திரம்

ஓம் தேவதா நமவங்கலி றீங் சுவாகா

என்று 1008 முறை ஜெபிக்க சகல தேவதைகளும் வசியமாகும், சக்தியுமுண்டாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வீரபத்திரர் எந்திரம்

புத்திர சந்தான முண்டாகும் சுகமாக வாழக்கடவர்




எவர்களுக்கு மந்திரிக்க வேண்டுமோ அவர்களை முன்னே அமரச்செய்து இச்சக்கரத்தை வைத்து ஹரி ஓம் நமசிவாய ஆதிபரமேஸ்பரபுத்திரா அகோர வீரபத்திரா அக்கினியீஸ்பரா சர்வபூதபேய் பிசாசுகளையும் ஓட்டி புத்திரசந்தான முண்டாக ஓம் அவ்வும் சவ்வும் ஆயிரத்தெட்டு உருச்செபித்து தகட்டை கட்டி விபூதி போட பேய் பிசாசுகள் விலகி சர்வ சுகமும் புத்திர சந்தானமுண்டாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சக்தி திரிபுர வசிய மந்திர சக்கரம்

பூசை விதிப்படி தேங்காய், பாக்கு, பழம், வெற்றிலை, புஸ்பம், சாறி, தீபதூபம், கொடுத்து சிகப்பு நிறப்புஸ்பத்தால் ஹிரி ஓம் அங்உங் றில் ஐயும் கிலியும் சவ்வும் வாலை பரமேஸ்வரியே வாக்கில் குடிகொண்டு நிற்க சுவாகா.




*1008* உருச் செபித்து அன்னை திரிபுரை வசியமவாள் அப்படி வசியமான பின் எத்தேவதைகளையும் வரவிக்கலாம். சர்வ யோக ஞான சித்திகளுமுண்டாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## சக்தி புவனை வசிய மந்திர சக்கரம்

ஓம்





பூசை விதிப்படி தீப தூபம் கொடுத்து மஞ்சல் புஸ்பத்தினால். ஹறிஓம் நமசிவாயா ஆதிபரமேஸ்வராயா சர்வபூதப் பேய் பிசாசுகளையும் கட்டு கட்டு ஓம் ஆம் அவ்வும் சுவாகாவென 1008 உருக்கொடுத்துக் கட்டிக் கொள்ள புவனை வசியமாவான் சகல காரியங்களும் சித்தியாமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஆதி வயிரவர் வசிய எந்திர சக்கரம்




முறைப்படி தீப தூபம் கொடுத்து மனச் சுத்தியுடன் வயிரவக் கடவுளை நினைத்து ஹிரிஹும் வயிரவா அக்கினி வயிரவா அங்உங்சிங்வங் நயமசிவய சுவாகா என 1008 உருக்கொடுத்துக் கொள்ள வயிரவர் வசியமாகி சர்வ காரியங்களும் சித்தி புத்திர பாக்கியங்களுமுண்டாம்.



அட்ட வயிரவர் எந்திரம்

ஐயும் கிலியும் சௌவும், உக்கிர, உள்மந்த சண்ட அசித்தகால. அட்ட வயிரவதேவதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சரியான காரணம் இல்லாமலே அவர்களுடைய திருமணம் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும். சில ஆண்கள் அல்லது பெண்கள் தாங்கள் விரும்பியவரைத் திருமணம் செய்து கொள்ள இயலாதவாறு இடையூறுகள் ஏற்படும்.

மேற்சொன்ன நிலைமையினை மாற்றி அமைத்து திருமணம் காலத்தோடு நடைபெறவும், விரும்பயவர்களையே மணந்து கொள்ளவும் உதவும் மந்திரங்கள் உள்ளன.

இவற்றில் குறிப்பிடத் தக்கது --ஷசுயம்வா மோகினி' மந்திரமாகும்.

மந்திரம்

"ஓம் ஜம் ஹ்ரீம் யோகினி
யோகினி யோகேசுவரி, யோக
பயங்கரீ, சகல ஸ்தாவர
ஜங்கம மூகஹ்ருதயம்
மமவசம் ஆக்ருஷ்ய
ஸ்வாகா"

வெள்ளிக்கிழமை அந்தி நேரத்தில் நீராடி பரிசுத்த ஆடை அணிந்து முறைப்படி அனுஷ்டானங்களை முடித்துக் கொள்ள வேண்டும்.

அறையை தூய்மையாக பெருக்கி மெழுகிக் கோலமிட வேண்டும்.

திருவிளக்கு ஏற்றி வைத்து அதற்கு மலர்சூட்டி மஞ்சள் குங்குமம் இடவேண்டும்.

அடுத்து கும்பம் ஸ்தாபிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் வடை படைத்து தூப தீபம் காண்பித்து மேற்சொன்ன மந்திரத்தை 1008 முறை உருவேற்றி உற்சாடனம் செய்யவேண்டும்.

பின்னர் பூசையில் வைக்கப்பட்ட திருநீறு, குங்குமத்தைப் பலனடைய வரும் ஆண்-அல்லது பெண்ணுக்கு அளித்து அதில் ஒருசிட்டிகை வாயிலிட்டு நெற்றிக்கும் இட்டுக் கொள்ளச் சொல்ல வேண்டும். இவை நான்கு வெள்ளி நாட்கள் தொடர்ந்து செய்யவும்.

**சுளுக்கு அகல மந்திரம்**

என்ன காரணத்தால் உடலின் எந்த உறுப்பில் சுளுக்கு ஏற்பட்டடிருந்தாலும் இந்த மந்திரத்தை 1008முறை உருவிட்டு உற்சாடனம் செய்ய வேண்டும்.

மந்திரம்.

ஓம் அண்ட முருக,
ஆகாச முருக, சூல முருக
சுடுகாடும் உருக,இங்கு
சுளுக்கினால் ரத்திரன்
விடு விடு நடு விடு போக
விடு விடு சுவாஹா

எந்த நிலையில் எந்த இடத்தில் சுளுக்கு ஏற்பட்டதோ அந்த இடத்து மண்ணை கைப்பிடி அளவு எடுத்து சுளுக்கியுள்ள இடத்தில் உதிர்த்தவாறே மந்திரஉரு உச்சாடனம் செய்யவேண்டும். பிறகு சுளுக்கிய இடத்தினை கையினால் மூன்று தடவை மேலிருந்து கீழாக இறக்கிவிடவேண்டும்.

இவ்வாறு மூன்று நாட்கள் செய்ய சுளுக்கு முற்றிலுமாக அகன்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**கல்வியில் தேர்ச்சியும் உயர் பட்டங்களும் பெற**

கல்விப் பயிற்சி யாதா இருப்பினும் அதில் தங்குதடையற்று தொடர்ந்து தேர்ச்சி பெற்று உயாந்த பட்டங்களை எளிதாகவும் நிச்சயமாகவும் பெறுவதற்கு கலைமகள் பூஜை யந்திரத்தை பயன்படுத்த வேண்டும்.



இசை, நாடகம், திரைப்படத்தில் நடிப்பு போன்ற துறைகளில் உச்ச நிலைக்குச் சென்று புகழ், பெற்று வாழவும் இந்த யந்திரம் நம்பிக்கையாக உதவி செய்யயும்.

கலைமகள் பூஜா யந்திரத்தின் உருவ வரைவுப்படம் இங்கு தரப்பட்டிருக்கிறது.

இந்த மந்திரத்தை ஜபிக்க இதிகாலை நேரமே உகந்ததாகும்.

கலைமகள் பூஜா யந்திரத்தை வெள்ளித் தகட்டில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்.

அதிகாலையில் நீராடி உடல்-மனத்தைப் புனித நிலையில் வைத்துக் கொண்டு புத்தாடை உடுத்தி யந்திரத்தை பூஜையில் வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய், பழம், அவல், கடலை, கடலைச் சுண்டல், பாயாசம் ஆகியவற்றை நிவேதனப் பொருளாகப் படைக்க வேண்டும்.

தூப, தீப கற்பூர ஆராத்தி காண்பித்து, கீழ்கண்ட மூல மந்திரத்தை 1008 முறை உருவிட வேண்டும்.

**மூலமந்திரம்**

"ஹறி ஓம், ஐயும் கிலியும் சௌவும் வாக்கில் ஆசனீ வா வா! நசிமசி வா வா! கலாதேவி வா வா!என் நாவினில் நினது சக்தி அருள் விளையாட அருள்செய் அங் கிங் வங் சுவாகஹா."

**பதவி உயர்வுக்கு**

நீண்ட காலமாக பதவி உயாவு இன்றி தேக்க நிலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெற, இலக்கிய கலைத்துறையில் மேன்மை நிலை அடைய, செய்யும் தொழில் அபிவிருத்தி அடைய, கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெற மற்றும் இது போன்ற பிரச்சினை-களுக்குத் தீர்வுகாண கலைமகள் யந்திரம் பேருதவி புரியும்.

திருமகள் பூஜா யந்திரத்தின் அமைப்பு முறை கீழே தரப்படுகிறது.

கிழக்கு முகமுள்ள குத்து விளக்கினை ஏற்றி வைக்கவேண்டும். தாம்பூலம், பழம், கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்தி, சந்தணம், மஞ்சள்தூள், குங்குமம் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் பூஜா யந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து கொள்ளவேண்டும்.

பூஜை நடைபெறும் நாள் வெள்ளிக்கிழமையாக இருப்பின் உத்தமம்.

யந்திரத்தை பால் கொண்டு அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்.

சுண்டல், வடை, பொங்கல், பாயசம் ஆகியவற்றை நிவேதனப் பொருகளாக சமாப்பிக்க வேண்டும்.

விளக்கு ஏற்றி தூப தீபம் காண்பித்து, தேங்காய் உடைத்து நைவேத்தியம் செய்ய வேண்டும்.

முதலில் பூஜை எந்தவித விக்கினமும் இன்றி நிறைவேற கீழ்க்கண்ட மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

"ஹரி ஓம், அஸ்யஸ்ரீ ஆத்யாதீ ஸ்ரீ மகாலட்சுமி மந்திரஸ்ய பார்க்கவரி" அனுஷ்டுப் சந்தாம் ஸ்ரீ ஆத்யாதி ஸ்ரீ மகாலட்சுமி சகித ஸ்ரீம் பீஜம் சக்தீ ஐம் கீலகம ஆத்யாதி ஸ்ரீ மகாலட்சுமி தேவதா பிரசாத ஸித்யர்த்தே ஜெபே விநியோக ஹா."

இதனை அடுத்து மூல மந்திரத்தை 1008 முறை பக்தியுடன் உச்சாடனம் செய்ய வேண்டும்.

**மூலமந்திரம் வருமாறு:**

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் மகாலட்சுமி கமலதாரண்யை ஸ்வாஹா"

இந்த மந்திர யந்திர பூஜையினைப் தொடர்ந்து 38 வாரங்கள் செய்து வந்தால் எத்தகைய கொடிய வறுமையில் வாடுபவர்கள் பெருஞ்செல்வம் பெற்று உயர்நிலையடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல வித ரோகங்கள் அகல**

காரணம் தெரிந்தோ தெரியாமலோ மக்களுக்கு பல விதமான நோய்கள் ஏற்புடுவதுண்டு. சில வகை நோய்களுக்கு எவ்வளவு தீவிரமான சிகிச்சை அளித்தாலும் குணமாவதில்லை. குறிப்பாக பலவிதக் கட்டிகள், இரணங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். சில பெண்கள் வயது அதிகமாகியும் கூட பருமடையாமலேயே இருப்பார்கள். இதற்கான காரணமும் விளங்குவது இல்லை. இத்தகைய பெண்களுக்கு மந்திரத்தின் மூலம் துரிதமாக பருவமடையும் நிலையை அடைய முடியும்.

இதற்கான மந்திரத்தை 'நவதுர்கா' மந்திரம் என்று கூறுவார்கள்.

இந்த மந்திரத்தை பிரயோகிப்பதற்கு நவதுர்கா யந்திரம் ஒன்றைத் தாயாரித்துக் கொள்ள வேண்டும். இந்த யந்திரம் செப்புத் தகட்டில் எழுதப்பட வேண்டும்.

இந்த யந்திரத்திற்கு அபிஷேகம் செய்து வாசனைத் திரவியம், மலர், சந்தணம் ஆகியவற்றைச் சாந்தி மகாநைவேத்தியம் செய்து மூல மந்திரத்தை 1008 முறைகள் செபித்து உருவேற்ற மந்திர சக்தி உண்டாகும்.

**மூல மந்திரம் வருமாறு:**

"அஸ்ய ஶ்ரீய நவதுர்க்கா மஹா
மந்த்ரஸ்ய, பகவான் பைரவருஷி திருஷ்டுப்ஸந்து
நவதுர்க்கா, தேவா ஹ்ராம், பீஜம், ஹ்ரீம்
சலேசம், ஹ்ரூம்சக்தி, மம ஶ்ரீநவ துர்க்கா தேவி
பிரஸாத ஸித்யர்த்தே ஜபேவிநியோக."

"ஓம் ஹ்ரீம், ஓம் துர்க்காயை மஹீஷா
சுரமர்த்தினி சர்வ சத்ராம் நாசய ஹம்பட்
ஸ்வாஹா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மந்திரத்தை மஞ்சளில் ஜெபித்து, பருவ மடையாத கன்னிப் பெண்ணுக்குக் கொடுக்க பருவமடைவாள். வெண்ணையில் செபித்துக் கோடுக்க மக்கட்பேறு இல்லாதவர்க்கு அப்பேறு உண்டாகும். எண்ணையில் மந்திரித்து ஜேபித்து அந்த எண்ணையை இரணங்களுக்குத் தடவ, கட்டி, கண்டமாலை, புற்று நோய், பவுத்திரம் முதலிய நோய்கள் குணமாகும். தண்ணீரில் செபித்துக் கொடுக்க வி'த்தினால் ஏற்பட்ட எல்லா நோய்களும் நீங்கும். இந்த மந்தித்தை முறைப்படி பிழையின்றிச் சித்தி செய்வர்க்கு எதிரிகளின் பயமே இராது.

**பகைவரின் கட்டை அறுக்கும் மந்திரம்**

நம்முடைய விரோதிகளாக இருக்கும் சிலர் நமக்குத் தொல்லையும் தொந்தரவும் கொடுக்க வேண்டுமென்பதற்காக மந்திர சக்தியின் மூலம் நம்மை ஷகட்டி' விடுங்கள்.

இவ்வாறு கட்டப்பட்டவர் செயல் இழந்து விடுவார். புத்தி பேலித்தவர் போல் வாய் பிதற்றிக் கொண்டிருப்பார். புத்தி நிதானத்தில் இருக்காது. உணவில் விருப்பம் காண்பிக்க மாட்டார். நாளுக்கு நாள் உடல் மெலிந்து கொண்டு வரும்.

இந்த குறிகள் உள்ளவர்களுக்கு எவ்வளவு சிறந்த மரத்துவ சிகிச்சை ,அளித்தாலும் அவர்களுடைய உடல் குணமாகாது.

இவ்வாறு மந்திரத்தில் கட்டப்பட்டவர்களை குணமாக்க 'கட்டவிழ' மந்திரத்தை பயன்படுத்த வேண்டும்.

அதிகாலை நேரத்தில் பாதிக்காபட்டவரை நீராட செய்து தூய வெண்ணிற ஆடை அணிவித்து சூரியன் இருக்கும் திசை நோக்கி நிற்கச் செய்ய வேண்டும்.

மந்திரம் ஜெபிப்பவரும் நீராடி புனித ஆடை அணிந்து நெற்றியிலும், மார்பிலும், இரண்டு புயங்களிலும் விபூதி பட்டை அடித்து சூரிய பகவானுக்கு பூஜை செய்ய வேண்டும்.

பிறகு பாதிக்கப்பட்டவரின் முன்னால் நின்று கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கட்டவிழ்' மந்திரத்தை ஜெபிக்க வேண்டும். மந்திரத்தை உருப்போடும் ஒவ்வொரு தடவையும் ஒரு சிட்டிகை விபூதி எடுத்து பாதிக்கப்பட்டவர் மீது ஊதி விட வேண்டும்.

**இனி கட்டவிழ் மந்திரத்தை கூறுவோம்.**

"ஓம் திருக்கண் வராகி உன் திருமுகத்தழகும்: மயூர நிறமும் மதோன்மஸ்தமும்: அகோர தந்திரமும் குருதித் தாரையும் புணைத்தோளும்: பரந்த கொங்கையும் கோல வாடையும்: குலாவிய மனமும் பயங்கர வடிவமும் பாதக் கிண்ணியும்: நேமி நீங்காத திவ்விய கரமும், கடகமின் நாராலும் தாழ்ந்த செங்கரமும் அலமோரு பரிசையணிந்த கரமும் அபாய யுத்தமும் இடியிடித்திடுவது போல எழும்பித் தொணி செய்வது சிவனாரிடத்தலடு பஞ்சான்னமும்.

"அன்பரைப் பொழுதில் நேமிக்கிரையீடு நீலியென்றேன் உன்னை நாயேன் தொழுது நவின்று வணங்கிட

"என் பகை தீர்ப்பது: உனக்குப் பாரமில்லாமல் பார்க்கும் பாரம் காப்பது உன் கடனே: அட்சரி வராகி மஹரீரீ மகாவீரீ ஓம்ஐம் க்லீம் சௌவ்வும் ஆனவளே: ஐங்காரத்து சர்வ லோகமாதர்வே, விரைவில் இறங்கு இறங்கு சூத்திர ராங் பராங்கு பராங்கு சிவ உபதேச சிதம்பர நற்தேவீ."

"என்னோடு பகைத்தவன் தலையது கிழிய, மூளை சிதறிட முண்டம் ' குதித்திட கடித்துக் கடித்து அவன் ஆவியை உண்டு குருதியைக் கொப்பளித்து குடல் மாலையிட்டு, ஈரலும் சதையும் எலும்போடு நிணமும் கொடிய காளி தாக்கு தாக்கு இந்தா என்று எடுத்து விருந்திடு."

"ஆங்காரத் தீ, சொரூபி, ஓங்கார அண்ட கோள மசைந்து நடுங்கித் திசைகளும் அசையத் திக்குகள் மலைகள் எட்டும் கிடு கிடு என்றும் தீர்ந்திடப் பாதாளம் நடுங்கிட பார்த்தளிக்க மன்னவர் வீற்றிட இராக்கதரோடே இரத்தக் காட்டேரி வீரன் சடாமுனி வேதாள பூதமும் கொடிய பிசாசும் கூறு சாத்தானும் வஞ்சனை பில்லி வைப்பு சூனியமும் எந்திரம் மந்திரம் எத்துக்களும் சத்துருப் பகையும் சர்வவியாயபியும் நச்சு வி'மும் நடுங்கிக் குத்திட நெருப்பு எழ வீழ்ந்து நீர்த்துளியிட்டு துஷ்ட மிருகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்துமே வீறிட்டோடி விழுந்து உதிரம் பெருக" காலில் சிலம்பு கலகல வென்று வர, அன்பர்கள் வணங்க பஞ்சானனமே.

"ஓம் ஐயும் கிலியும் சௌவும் என்றே உன் பாதம் தொழ என்னைப்பகைத்தவர் அவர் பூண்டொடொழிய ஓம் வராகி வசியவராகி சிவ வராகி சிவ சமயவராகி ஒடுங்கி ஓடிவர். நசி மசி வா வா சுவாஹா!"

இந்த மந்திரத்தை 1008 முறை ஜெபித்து உருவேற்ற மந்திரத்தால் கட்டப்பட்டிருக்கும் மனிதரின் கட்டு சிறுக சிறுக அவிழ்ந்து இறுதியில் முற்றிலுமாக விடுபடுவார்.

## எளிய முறையில் சில மந்திரங்கள்

1. அரி ஓம் றீங் சிவய வசி சுவாகா என்று தியானிக்க பேய் பிசாசுகளும் பிரமராட்சதைகளும் விலகும்.

2. அரி ஓம் நமசிவாயா சுவாகா என்று தியானிக்க நினைத்த காரியம் சித்தியாகும் தேவதை கைவசமாகும்.

3. அரிஓம் அரகர நமசிவாய ஓம் சுவாகா என்ற தியானிக்க தேக சித்தி காரியசித்தி ஞான சித்திகளுண்டாகும்.

4. அரி ஓம் நமசிவாய சுவாகா வென்று வாலைப் பூட்டி புருவ நடுச்சுழியை நோக்கி தியானிக்க பிரம்ம சொருபம் தெரியும்

5. அரி ஓம் றீம் சிம் சிவா சுவாக என்ற புருவ நடுச்சுழியை நோக்கி மனக் கண்ணினால் தியானிக்க பஞ்சபூதமொடுக்கி சிவயேகியாவான்.


6. அரி ஓம் கங் றீங் சிம் சிவ சுவாகா என்று தியானிக்க நவக்கிரகங்களின் தோசங்கள் விலகும்.

7. அரி ஓம் சம் அங் உங் றீங் மசிநசிசுவாகா வென்று வெண்ணெயிலாவது அல்லது ஆமணக்கெண்ணையிலாவது (108)உருச்செபித்து கஸ்ட்டப்பிரசவத்திக்கு வயிற்றில் தடவ குழந்தை பிரசவமாகும். முதல் சித்தி மந்திரம் ஜெபித்து செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டை கண்டுபிடிக்கும் கிண்ணி மந்திரம்




ஒரு கிண்ணிய்யத் தூய்மையாகத் துலக்கி, அதனை பால், இளநீர், கோமயம், தயிர், பன்னீர் ஆகிய ஐந்தையும் கலந்து கழுவவேண்டும். பின்பு அதன் நான்கு பக்கங்களிலும் மஞ்சள் கலசம் வைத்து குங்குமப் பொட்டிட்டு நிவேதனம் செய்ய வேண்டும். அடுத்த அந்தக் கிண்ணியைத் தன் இருகைப் பெருவிரல்களாலும் அழுத்திப் பிடித்து கொண்டு கீழ்க்கண்ட மந்தித்தைச் செபிக்க அந்தக் கிண்ணி நகர்ந்து கொண்டே சென்று பொருளைத் திருடிய கள்வனைக் காட்டும்.

கிண்ணியைத் தயார் செய்ததும் கீழ்க்காணும் அகோர வீர சக்கரத்தை வெள்ளித் தகட்டிலோ செம்புத் தகட்டிலோ வரைந்து, கிண்ணிக்குள் வைத்து அதற்குரிய மந்திரத்தை முறைப்படி செபித்து பூசிக்க, கிண்ணி நகர்ந்து சென்று திருடனை அடையாளம் காட்டும்.

"ஓம் வீரபத்திரா, உத்தண்ட வீரபத்திரா, அகோர வீரபத்திரா, அதிவீரபத்திரா, நூறாயிரங் கோடி சூரியப் பிரகாசமும் சங்கொரு கை சக்கரம் ஒரு கை, பாசம் ஒரு கை, உலக்கை ஒரு கை, கலப்பை ஒரு கை, பிடி, ஒரு கை உடுத்திய புலித்தோலும் எடுத்த சொரூபமும் கொண்டு கள்வரைக் கண்டுபிடி பிடி, பிடி மாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு ஆதித்தனின் பற்களைக் பிடுங்கி கணங்களின் வயிற்றை மீறி அங்கசப் பிரமாணம் செய்து அகோர ரூபம் எடுத்து எங்கு மறைந்திரந்தாலும் கள்வன் கண்டுபிடி ஆவேசு. ஆவேசு சுவாஹா"

**ஒற்றைத் தலைவலிக்கு**

"ஓம் முப்பத்து முக்கோடி தேவரின் ஐந்தெழுத்தையும் நான் செப்பத்தகுமோ சிவ சிவ நசி மசி"

இவ்வாறு 1008 மறைகள் ஜெபித்து உருவேற்ற, மந்திரம் சித்தியாகும். பிறகு, நோயாளியின் தலையைப் பிடித்து, மேற்படி மந்திரத்தை 108 முறை செபிக்கக் கடுமையான தலைவலி நிவர்த்தியாகும். இதுபோலவே மேலும் சில வியாதிகளை இந்த மந்திரத்தைக் கொண்டே குணப்படுத்த முடியும்.

## குழந்தைகளுக்கு தோஷம் நீங்க

| | | | |
|---|---|---|---|
| க | ண | ப | தி |
| வ | சி | ம | சி |
| ந | சி | ந | சி |
| சி | வ | ய | நம |

இந்த சக்கரத்தை பஞ்சலோகத் தகட்டில் பதிந்து பூரண அமாவாசையில் கீழ்க்கண்டபடி பூஜைசெய்து அதில் கணேசமூர்த்தியை ஆவாகணம் செய்து குளிசமாடி கட்டிக்கொள்ள வேண்டியது.


**பூஜாக்கிரமம்:** சுண்டல், அவல், கடலை, பொரி, கிழங்கு, மாம்பழம், வடை, பாயாசம், தாம்பூலம், தூபதீபம், தூபதீப ஆராதனை செய்யவும்.

**மூலமந்திரம்:** ஓம் கணபதி மகா கணபதி நித்திய கணபதி சத்திக்கணபதி நில்லு நில்லு, சர்வ தோஷங்களை வெல்லு வெல்லு, உன்னாணை என்னாணை, உனைபடைந்த சிவணாணை வசி வசி சர்வதோஷம் நசி நசி சரவணபவ சிவாயநம சுவாகா உருவு 1008.


**பலன்:** இந்த குளிசத்தை சிறு குழந்தைகளுக்கு கட்ட எவ்வித தோஷங்களும் நிவர்த்தியாகும். சாதாரண குழந்தைகளுக்குக் கட்ட மேற்படி தோஷங்கள் வந்து அணுகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு தகட்டில் இந்த சக்கரத்தைப்போல் எழுதி பூசையில் வைத்து பூஜா விதிமுறைப்படியே காய்பழம் வெற்றிலை பாக்கு புஸ்பம், சாம்பிராணித் தூபம் கொடுத்து மஞ்சள் புஸ்பத்தினால் ஹிரி ஓம் நமசிவாய ஆதிபரமேஸ்வராயா சர்வ பூத பேய் பிசாகளையும் கட்டு, ஓம் அம் அவ்வுஞ் சுவாஹா என்று ஆயிரத்தெட்டுப் போட்டு அந்தத் தகட்டையெடுத்து கட்டிக் கொள்பவர்களை வசியமாகும். அப்படி வசியமானால் நினைத்தகாரியம் சித்தி செய்து வைப்பாள் சகல பாக்கியமுண்டு.





இந்தச் சக்கரத்தை முன்னதாகவே பதினாயிரம் உருப்போட்டு சித்திசெய்து கொண்ட பின்பு சுரங்களுக்கு மந்திர ஆர்ப்பனம் செய்ய வேண்டியது சுரமுள்ளவர்களைத்தன்முன்பாக இருத்தி ஒரு தாம்பாளத்தில் திருநீறு பரப்பி வெற்றிலைக்காம்பினால் இந்த மந்திர சக்கரம் போட்டு அதற்குள் தீபம் கொடுத்து றோம் நீரிம் டம் சுவாகாவென்று 108 உரு செபித்து அந்த விபூதியை கையில் எடுத்து சுரமுள்ளவர்களின் சிரசிலிருந்து மந்திரத்தை 108 உரு செபித்து விபூதிபோட சுரம் வீக்கமும் குறையும். மூன்று நாளைக்கு செபிக்கவும் ஒருகோழிமுட்டை தலையை சுற்றிவெளியில் உடைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சகல பாக்கியங்களுமுண்டாக





இந்த சக்கரத்தை முன்னதாகவே கோவில்களில் பூஜாவிதிமுறைப்படி பதினாயிரம் உருப்போட்டு சித்தி செய்துகொண்ட பின்பு மந்திரம் செய்ய வேண்டியது.

ஒரு தகட்டில் இந்த சக்கரம் போல் மந்திர அட்சரம் எழுதி பூசையில் வைத்து பூசை விதிமுறைப்படி தேங்காய், பழம், புஸ்பம், சூடன், சாம்பிராணி, தீபம் கொடுத்து வெள்ளை புஸ்பத்தினால் ஹரி ஓம் அம் உம் ஐயும் கிலியும் சௌவ்வும் நமசிவய சரவணபவ தேவநமகா என்று 1008 உரு செபித்து கையிலாவது இடுப்பிலாவது கட்டிக்கொள்ள சகலபாக்கியங்களும் உண்டாகும்.

## வயிரவர் வசிய மந்திர சக்கரம்

இந்தச் சக்கரத்தை முன்னதாகவே வீடுகளில் அல்லது கோவில்களிலாவது பதினாயிரம் உருப்போட்டு சித்தி செய்து கொண்ட பின்பு மந்திரிக்க ஆரம்பம் செய்ய வேண்டியதும் அரி ஓம் வயிரவா அக்கினி வயிரவா அங் உங் சிங் வங் நமசிவய என்று 1008 உருப்போட்டு தகட்டை கட்டிக்கொள்ள வயிரவர் வசியமாவார். அதனாலே சகல பாக்கியங்களும் புத்திர சம்பந்தமுண்டாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


## சிதம்பர சக்கரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ந 9 | ம 11 | சி 4 | வ 15 | ய 12 |
| சி 4 | வ 15 | ய 12 | ந 9 | ம 11 |
| ய 12 | ந 9 | ம 11 | சி 4 | வ 15 |
| ம 11 | சி 4 | வ 15 | ய 12 | ந 9 |
| வ 15 | ய 12 | ந 9 | ம 11 | சி 4 |

| பஞ்ச பூதம் | பஞ்சாக்ஷரம் | பீஜாக்ஷரம் | உயிரக்ஷரம் | ஆதாரம் |
|---|---|---|---|---|
| பிருதிவி | ஓம் ந | லம் | அ | மூலாதாரம் |
| அப்பு | ம 11 | வம் | இ | மணிபூரகம் |
| தேயு | சி 4 | ரம் | உ | அனாகதம் |
| வாயு | வ 15 | யம் | எ | விசுத்தி |
| ஆகாயம் | ய 12 | ஹம் | ஒ | ஆக்ஞை |

உடலில் ஆறாதாரஸ்தானம் தலைகழுத்து மார்பு வயிறுகால் வரை யவசிமந என்று மனக் கண்ணால் எழுதி மூலமந்திரம் பிரணவமாகிய ஓங்காரம் சேர்த்து தியானிக்க விஷமிறங்கும். இந்தச் சக்கரத்தை தாமிரம், வெள்ளி, தங்கம் இந்த மூன்று லோகங்களில் ஏதாவது ஒன்றில் தகடு செய்து இந்த சக்கரம்போல் எழுதி பூசையில் வைத்து தீபம் கொடுத்து அரிஓம் ஐயுங் கிலியும் சௌவும் மிறியும் நமசிவய சிதம்பரதேவாயநமகா என்று 1008 உரு போட்டு தகட்டை கட்டிக் கொள்ள சகல பாக்கியங்களும் புத்திர சந்தானமும் பெருஞ் செல்வமும் உண்டாகும்.

## பேய் பிசாசு பூதங்களை விரட்டுதற்கு மந்திர சக்கரம்




இந்த மந்திர சக்கரத்தை முன்னதாகவே பதினாயிரம் உருப்போட்டு சித்தி செய்து கொண்டபின்பு மந்திரிக்க செய்ய வேண்டும். இரு தகட்டில் இந்த சக்கரம் போல் மந்திர அட்சரங்கள் எழுதி பூசையில் வைத்து பூஜா விதி முறைப்படி தேங்காய், பழம், புஸ்பம், சூடன் சாம்பிராணி, தூபம் கொடுத்து அரணி புஸ்பத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி ஓம் அவ்வும் வசியமாக சுவாகா வென்று பேய் பிடித்தவர்களை முன்பாக வைத்துக் கொண்டு ஆயிரத்தெட்டு உருப்போட்டு அந்தத் தகட்டை கட்ட பேய் பிசாசுகள் விலகிப்போகும் இதற்கு அடையாளம் முகத்தில் வசீகரமுண்டாகும்.

## இஸ்ர குல தெய்வ எந்திரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ய | ந | ம |
| வ | சி | ந | ம | ய |
| ய | வ | ம | சி | ந |
| ந | ம | வ | ய | சி |
| ம | ய | சி | வ | ந |

| | | | | |
|---|---|---|---|---|
| யக | உம | கக | எ | க |
| ற | ற | வூ | ளு | ளு |
| ளு | சூ | சூ | சூ | ளு |
| ய | க | உ | ரு | எ |
| க | உ | ய | எ | க |

| | | | |
|---|---|---|---|
| ளு உங் | ளு க | ளு எ | ளு எ |
| ளு யகா | ளு அ | ளு உஉ | ளு உ |
| ளு ரு | ளு அ | ளு ங | ளு ருஉ |
| ளு ச | ளு ஙஉ | ளு சுூ | ளு எய |


| | | | |
|---|---|---|---|
| சிஉந ம | ஒகம லி | மடய ளு | பிப சங |
| ங யசா | ஓ அயஅ | உவை ஜஞு | சலிசீ உறிங |
| அரு ஙா | வயங அயஅ சலங | வங சுூ சலங | ஙநஉ ருலங |
| ளஙசல ஆசல | உ உ உளு | ஙிந சா | கியும யகி எநி |

இந்த நான்கு எந்திரங்களும் அங்கம் பில்லி சூனியம் முடுகாமலும் தன் எதிரிகளிருந்து விடுபடவும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் கை கண்டது. தாமிர தகட்டில் எழுதிக் கலசமாடி மடைவைத்து தூபதீபம் காட்டி தங்கள் இஸ்ட குல தெய்வத்தை நினைந்து அவர்களின் மூலமந்திரத்தினால் 108 உருக்கொடுத்து பின் தாயத்தில் அடைத்து கட்டுவதற்கு முன் நீர் ஓதி அடித்து நீறு சாத்தி பின் இடுப்பிலாவது கழுத்திலாவது கட்டிக் கொள்ள காரிய சித்தியாகும். தன் பட்சி, அரசு, உண்டி நடையில் பலிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவசியமுண்டாக



இந்த சக்கரத்தை காரியத் தகட்டிலாவது செம்புத் தகட்டிலாவது வரைந்து ஆதிவாரம் அல்லது அமாவாசையிலாவது ஆரம்பஞ் செய்து கீழ்க்கண்ட பூஜையுடன் மூலமந்திரத்தை ஜெபித்து குளிமாடி கட்ட வேண்டியது.

**பூஜாக்கிரமம்:** பால், பழம், தேங்காய் அவல் கடலை, தாம்பூலம் பலகாரங்கள் வைக்க வேண்டியது.

**மூலமந்திரம்:** ஓம், வசி, வசி, ஜெகத் வசி, வசிய நம உரு 1008.

**பலன்:** இந்தக் குளிசத்தைக் கட்டிக் கொண்டு சென்றால் ஸ்திரீ வசியம், புருஷ வசியம், ராஜ வசியம், லோக வசியம், வியாஜ்யம் வழக்கு வெல்லுதல், வியாபாரம் முதலிய சர்வ வசியம் உண்டாகும்.

## குழந்தைகளுக்கு நோயணுகாதிருக்க

| | | | |
|---|---|---|---|
| ந | ம | சி | வ |
| ம | சி | வ | ய |
| வ | ய | சி | ம |
| ந | சி | ம | சி |

இந்த சக்கரத்தை சுவர்ண தகட்டில் வரைந்து, ஆதிவாரத்தில் தொடங்கி மூன்றாவது ஆதிவாரம் எடுத்து, குளிசமாட வேண்டியது.

**பூஜாக்கிரமம்:** சர்க்கரை பொங்கல், பால், பழம், தூபதீபம் கொடுத்து, சிறு பிள்ளைகளுக்கு வினியோகிக்க வேண்டியது.

**மூலமந்திரம்:** சர்வதோஷம் நிவர்த்தி, சர்வபிணி நசி நசி சுவாகா உருவு 1008

**பலன்:** இந்த தாயத்தை பிறந்த குழந்தை முதற்கொண்டு 12 வயது பிள்ளைகள் வரையில் கட்ட, எவ்விதமான நோய்களும் அணுகாமல் திடகாத்திர ஆரோக்கியமுண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல சித்தி, சக்திகளும் பெறுவதற்கான மந்திரம்

இயற்கையாக நமக்கு என்ன சக்தியும் வலிமையும் இருந்தாலும் எப்போதுமே அது பயன்படும் என்று கூற முடியாது. ஏதோ ஒரு வகையில் நாம் பலவீன நிலையில் இருந்தால் நம்முடைய சக்தியும் வலிமையும் பயன்படாமலே போய் விடக்கூடும். இதற்கு மாறாக மந்திர சக்தியின் மூலம் நம்முடைய சுய சக்தியை வளர்த்துக் கொண்டோமானால் எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் நம்முடைய சக்தியை பிரயோகித்து வெற்றி காண முடியும்.

இவ்வாறு நாம் மந்திரத்தின் மூலம் சுய சக்தியை வளர்த்துக் கொண்டோமானால் நாம் சொல்லும் வாக்கு சொன்னபடியே பலிக்கும். நோயாளிக்கு நாம் அளிக்கும் விபூதியை பூசினாலே நோய் அகன்று விடும். நம்மை எதிர்க்க வருபவர்கள் எவ்வளவு பலசாலியாக இருந்தாலும், எவ்வளவு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் நம்முடைய கண் பார்வையைக் கொண்டே அவர்கள் சக்தியை ஒடுக்கி விட முடியும்.

இந்த மந்திரத்திற்கு உதவக் கூடிய சண்டேஸ்வரி யந்திரம் ஒன்றையும் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

சண்டேஸ்வரி யந்திரத்தின் மாதிரி உருவம் கீழே தரப்பட்டிருக்கிறது. சண்டேஸ்வரி யந்திரத்தை வெள்ளித் தகட்டில் வரைந்து கொள்ள வேண்டும்.

பிறகு அந்த யந்திரத்திற்கு பாலால் அபிஷேகம் செய்து வாசனைத் திரவியங்களால் அலங்கரிக்க வேண்டும்.


பின்பு, ஓரிடத்தில் தூய்மையாக மெழுகிக் கோலமிட்டு, அதன் மீது கும்பக்கலம் வைக்க வேண்டும். செம்பின் மீது மாவிலை வைத்து, அதன் மீது தேங்காயை வைக்கவும். கலசத்திற்கு நூல் சுற்றி, கலசபூஜை செய்து விநாயகர் பூஜை செய்து முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை செய்து, இந்த மூலமந்திரத்தை ஓர் இலட்சம் முறை செபித்து உருவேற்ற வேண்டும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரம்மச்சாரிய விரதத்தை நழுவவிடக்கூடாது. ஒருமித்த மனத்துடனும் ஏகாக்கிர சித்தத்துடனும் பயபக்தியுடனும் இந்த மந்திரத்தை செபித்து சித்தியடைய வேண்டும். இவ்வாறு மந்திர-சித்தியை அடைந்து விட்டால், இதனால் ஆகாத செயல் ஒன்றுமில்லை.




ஒவ்வொரு நாளும் பூஜை செய்து முடிந்தவுடன், தேவி மஹாத்மியம் பாடம் செய்ய வேண்டும். இது அனுபவத்தில் பயனளிக்கும் சிறந்த மந்திரமாகும். இந்த மந்திரம் சித்தியான பிறகு, மாந்திரீக அஷ்ட கர்மங்களுக்கும் பிரயோக மந்திரத்தை ஜெபித்து பிரயோகம் செய்ய, எதிர்பார்க்கும் பலன்களை உறுதியாக அடையலாம்.

இதற்கான பூஜை விதிமுறையை இப்போது கூறுகிறோம். இந்த பூஜையை செய்வதற்கு பௌர்ணமி தினம் உத்தமமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமி தினத்தன்று மாலையில் நீராடி தூய்மையான வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும்.

பிறகு கிழக்குப் பக்கம் வாசலுள்ள தனி அறையை சுத்தம் செய்து பசுஞ்சாணத்தால் மெழுகி கோமியம் தெளித்து கோலமிட வேண்டும்.

ஒரு தலை வாழையிலையைப் பரப்பி, அதில் பச்சரிசி இட்டு, கும்பக் கலசம் வைக்க வேண்டும். அந்தக் கும்பத்திற்கு நூல் சுற்றி, மஞ்சள் குங்குமம் இட்டு, அதன்மீது மாவிலைக் கொத்து வைத்து, அந்த மாவிலையின் மேல் தேங்காயை மஞ்சள் பூசி வைக்க வேண்டும்.

அந்தக் கும்பத்தை அசோகம், முல்லை, செங்கழுநீர் தாமரை, மாம்பூ ஆகிய ஐந்து வகை மலர்களால் அலங்கரிக்க வேண்டும். பின்பு பிரதிஷ்டை செய்து மூல மந்திரத்தை 500 முறை செபித்து உருவேற்றிக் கொள்ள இந்த மந்திரம் சித்தியாகும்.

இந்த மந்திரத்தை 108 முறை ஜெபித்து, எலுமிச்சம் பழம், மல்லிகைப்பூ, சந்தனம், குங்குமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பிறரிடம் கொடுத்தால், அதனைப் பெற்றவர் உங்களுக்கு வசியமாவார். நீங்கனும் சொன்னபடியெல்லாம் ஆடுவார்.

இனி மூலமந்திரத்தை தெரிந்து கொள்ளுங்கள்:

"ஓம் நமோ பகவதே காமதேவாய, இந்தராய வசபாணயா இந்திர சந்திரபாணாயா, க்லசம் க்லிம் சம்மோ ஹனாயாஸ் ஸ வஸீகரண பாணாயாகம் பீக்ஹீம் பட்ஸ்வாஹா க்லீம் நமோ பகவதே காமதேவாய ஸ்ரீம் சர்வஜன ப்ரீயாய க்வீம் சர்வஜனஸம் மோஹனாயா ஜ்வல ப்ரஜ்வல ப்ரஜ்வல ஹனஹன வதவத தபதப ஸம் மோஹாயா சம்மோஹாயா ஜனமமே வசம் குரு குரு ஸீவாபஹா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வல்லமைசாலிகளையும் வணங்க வைக்கும் நாற்பது முக்கோணவசிய சக்கரம்

பிறரை வசியம் செய்யும் மந்திரத்தைப் பற்றி முன்பொரு தடவை கூறியிருக்கிறோம் என்றாம் இந்த வசிய சக்கரம் வேறு விதமானது.

நாம் யாரை வசியம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ அவரே ஒரு தேர்ந்த மந்திர சக்தி படைத்தவராக இருந்தால் அவரை வசியம் செய்வது எளிதல்ல. இலேசான மந்திர நடைமுறை கையாண்டு அவரை வசியம் செய்ய முற்படும் போது நாம் பிரயோகிக்கும் வசிய மந்திரம் சக்தி இழந்து விடக்கூடும்.

இவ்வாறு நிகழாமல் எதிரியை வசியப்படுத்தி நம் விருப்பம் போல் ஆட்டிப் படைப்பதற்கு இந்த நாற்பது முக்கோண வசிய சக்கரம் பயன்படும்.

இந்த வசிய முறையில் பிரயோகிக்கப்படும் மந்திரம் மிகவும் எளிதாகத்தான் இருக்கும். இந்த சக்கரம் தான் மந்திரத்திற்கு சக்தி ஊட்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சக்கரத்தை பஞ்சலோக தகட்டில் வரைந்து கொள்ள வேண்டும். பிறகு சக்கரத்திற்கு பால் அபிஷேகம் செய்து பழம் தேங்காய், மணமுள்ள மலர் படைத்து ஊதுபத்தி ஏற்றி வைக்க வேண்டும்.

முதன் முதலாக இந்த சக்கரத்தை முன்வைத்து ஜெபிப்பதற்கு சஷ்டி திதி அல்லது விசாக நட்சத்திரம் அமைந்த கால நேரம் சிறப்புடையதாகும்.

சூரிய உதயத்திற்கு முன்னதாக நீராடி சுத்தமான ஆடை அணிந்து உடலெங்கு விபூதி பூசி சக்கரத்திற்கு எதிராக கிழக்கு முகமாக உட்கார வேண்டும்.

வசிய சக்கரத்திற்கு முறைப்படி நைவேத்தியம் செய்து கையில் உருத்திராட மணி அல்லது படிக மணியைக் கொண்டு மந்திரத்தை 1008 முறை ஜெபிக்க வேண்டும்.

**மந்திரம் வருமாறு**

"ஓம்-ஆம்-ரிங்-சிங் - சரவணபவாயா - சண்முக சுப்பிரமணியவாலா சுவாமிநாதாயா - ஸ்ரீ முருகாயா இரகுநாதாயா சுவாயா நமஸ்து"

ஜெபித்து முடிந்த பிறகு யாரை வசியப் படுத்த நினைக்கிறோமோ அவருடைய காலடி மண்ணை ஒரு சிட்டிகை எடுத்து வந்து வசிய சக்கரத்தின் மேல் வைக்க வேண்டும்.

இவ்வாறு மூன்று நாட்கள் செய்து வர எவ்வளவு வசிய சக்தி வாய்ந்த மந்திர வாதியும் நமக்கு அடிமைப்பட்டு வலிய நம்மை அடைந்து நாம் சொன்ன மாதிரியெல்லாம் ஆடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


## மோகினி வசிய மந்திரம்

மிகவும் எளிதாக பிறரை வசியப்படுத்தும் மந்திரம் இது. இந்த மந்திரத்தை பயின்று சித்தியடைந்தவர்கள் நெற்றியில் விபூதி அணிந்து நாம் யாரை வசியப்படுத்த விரும்புகிறோமோ அவர் முன்னால் நடமாடினாலே வசியப்பட்டு நம் விருப்பம் போல் எல்லாம் செயற்பட ஆரம்பிப்பார்கள்.

இந்த மந்திரத்தில் சித்தியடைந்தவர்கள் எவ்வளவு கடிமான வழக்குகளில் ஈடுபட்டாலும் எளிதாக வெற்றி பெறுவார்கள். இவர்கள் எந்தத் தொழிலை செய்தாலும் வாழ்க்கையில் சுலபமாக முன்னேறுவார்கள். மிகக் கடுமையான விரோத மனபாவம் கொண்டவர்களும் வலிய வந்து நட்பு கொண்டு நமக்கு இணங்கி நடப்பார்கள்.

இந்த வசிய மந்திரத்தை ஜெபிப்பதற்கு முன்னால் மோகினி சக்கரம் ஒன்றை செப்புத் தகட்டில் எழுதி பூஜையில் வைக்க வேண்டும்.

சக்கரத்தின் உருவ அமைப்பு கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.




வசிய மந்திரம் வருமாறு:

"ஓம் நமோ பகவதி மகாமோகினி ஒங் நங் நமசிவாய நம இந்திரன் நந்த நீர், இறைவன் தந்த நீர், சூலகபாலி பரமேஸ்வரி தந்த நீர் என்னை விட்டு எதிரே நின்று என் முகங்கண்ட பேர் எதிரியினிடஞ் சென்று பல்லுருகி, பாதாளஞ் சிதறவுருகி, காமமுருகி, கட்டுருகி, முன்கைதிருகி, முழங்கால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகி, சக்கரம் திருகி, சூலந்திருகி, சுடுகாடு திருகி, சுடுகாட்டிலிருக்கும் உத்திரி மேல் திருகி, காளி காளாஸ்திரி எங்கள் திரு நீலகண்ட சுவாமி மேலாணை திருகி முருக்கிக் கொண்டோடிவா, காளி, சாமுண்டி, தக்கன் தலையை யறுத்தவளே, கபால சூலந்தரித்தவளே, சுடலை மோகினி இன்னார் மேல் கொண்டாடி வா சுவாகா”

யாரை வசியம் செய்ய நினைக்கிறோமோ அவர்களுடைய பெயரை ஒரு தட்டில் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் விபூதியில் எழுதி அதன் மீது மோகினி சக்கரத்தை வைத்து ஜெபிக்க யாருடைய பெயரை எழுதியிருக்கிறோமோ அவர் நமக்கு வசியம் ஆவார்.

## குழந்தைகளுக்கு




“கலவை” என்னும் பேய், குழந்தையை அணுகும். அதன் குணம்: உடல் வியர்க்கும் வாந்தியாகும். பால் போலக் கழியும். அயர்ந்து கிடக்கும் வயிறு பரியும். மார்பு வாடும். கால் கைகள் வலிக்கும் பலவித விகாரங்கள் தோன்றும். இதற்குச் சாந்தி: மாவினால் பாவை செய்து அதற்குப் பூச்சூட்ட வேண்டும். அதனோடு பால், சோறு, நெய் ஆகியவற்றைச் சேர்த்து ஒரு புது ஓட்டில் வைத்து குழந்தையைத் தாய் மடியில் வைத்து எலுமிச்சம் பழம் பலிகொடுத்து ஊருக்கு வடக்கே கொண்டு போய் வைக்கவும். மேல் காணும் இயந்திரத்தை செம்புத் தகட்டில் எழுதிக் கட்டவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மகா காளி யந்திரம்



அக்கினிக் கொழுந்தைப் போல ஆகாயம் வரை ஒளிவீசும் காளி, அனந்தகோடி முகங்களும் அனந்தகோடி உறங்காத முகங்களும் அனந்தகோடி ஜடைகளும் விரிந்து உக்கிரமான முகத்துடனே வந்து மாற்றான் மந்திரவாதிகளின் வளர விட்ட பாம்பு, பில்லி, சூனியம், பூதப்பிசாசு இவற்றையெல்லாம் உன்னுடைய திரிசூலத்தில் குத்திப் பாசத்தால் கட்டுக் கட்டு, முட்டு முட்டு, அடி அடி, இடி இடி இடி, பிடி பிடி பிடி, முறி முறி முறி. அண்டங்களையெல்லாம் காத்து ரட்சிப்பவளே, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியே.

"திரிசூலி, இரட்சி இரட்சி, இரணகளக் காளி, அகில உலகையும் நீ நினைத்தால் வாழவும் செய்வாய், அழியவும் செய்வாய், திரிசூல நாயகியே, கங்காளியே வா வா சுவாஹா."

இவ்வாறு பத்தாயிரம் முறை உருவேற்றிச் செபிக்க, மந்திர சித்தியாகும். தீபம் ஏற்றி வைத்து தூபமிட்டு, தேங்காய் பழம், தாம்பூலம், மாவிளக்கு முதலியவற்றை வைத்து, நைவேத்தியம் செய்து, தூபதீபங் கொடுத்து குங்கும அர்ச்சனை செய்து பூசிக்க வேண்டும்.

காளி பூஜை யந்திரத்தை காரீயத் தகட்டில் எழுதி, தேங்காய்ப் பழம் மாவிளக்கு, வடை, பாயாசம், வெற்றிலை பாக்கு முதலியவற்றை வைத்து, ஒரு மண்டலம் (18 நாட்கள்) பூஜை செய்ய வேண்டும்.

"ஓம் ஹ்ரீங் ஐயுங் கிலியும் சௌவ்வும் அகோர காளி. வா வா நசி மசி வா வா"

என்று ஓர் இலட்சம் உருவேற்றிச் செபிக்க சித்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோ சக்தியை வளர்த்துக் கொள்ள

நம்முடைய மனத்தின் சக்தியை வளர்த்து அதற்கு வலிமை ஊட்டி ஒருமுனைப்படுத்தி, பிரயோகிக்கும்போது உலகத்தில் சாதிக்க முடியாத காரியமே இல்லை எனலாம்.

இவ்வாறு மனோசக்தியை வளர்த்துக் கொள்ளும் சாதனையைத்தான் "ஹிப்னாட்டிசம்" என்று மேலைநாட்டினர் கூறுகின்றனர்.

இந்த மனோசக்தியை, (மனோவசிய சக்தியை) பயன்படுத்தி பிற மனிதரின் அடிமனத்தில் மறைந்திருக்கக்கூடிய உண்மைகளை குற்றம் குறைகளை எளிதாகக் கண்டு பிடித்து விட முடியும்.

ஒரு மனிதன், கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைச் செய்து விட்டு எவ்வளவு சாமர்த்தியமாக மனத்திற்குள் மறைத்து வைத்தாலும், மனோவசிய சக்தியின் மூலம் அவன் மறைத்து வைத்திருக்கும் குற்ற உணர்வுகளை வெளிக்கொண்டு வந்து விட முடியும்.

காரணம் புரிந்து கொள்ள முடியாத நிலையில் ஒரு மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் மனநோயினை மனோவசிய சக்தியின் மூலம் எளிதாகக் குணமாக்கி விட முடியும்.

பொதுவாக பிற மனிதர்களை நம் வயப்படுத்தி நம் இஷ்டம் போல் ஆட்டிப் படைக்க முடியும்.

இம்மாதிரியான மனோவசிய சக்தியயைப் பெறுவதற்கு மேலைநாட்டினர் எத்தனையோ விதமான மனோவசியப் பயிற்சியினை அளிக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி முழுமையான அளவுக்கு பலன் தந்ததாகக் கூறுவதற்கு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டிலே இதற்கென உள்ள ஜீவாதார மந்திரத்தை ஜெபித்து மனத்தின் வலிமையைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

இந்த மனோவசிய மந்திரத்தை சூரியன் உதிப்பதற்கு முன்னால் அதிகாலை நேரத்தில் உச்சாடனம் செய்ய வேண்டும்.

அதிகாலையில் நீராடி உடலை சுத்தம் செய்து ஈரத் துணியை இடுப்பில் அணிந்து கொண்டு இஷ்ட தேவதைகளை மனத்தில் நினைத்து வழிபட்ட பிறகு இந்த மந்திரத்தை மனத்திற்குள்ளாகவே உச்சரிக்க வேண்டும்.

இவ்வாறு மந்திர உச்சாடனம் செய்யும்போது மனத்தை அலைய விடாமல் ஒரு நிலையில் நிறுத்த வேண்டியது அவசியம். மனம் ஒருநிலைப்படாமல் அலைபாய நேர்ந்தால் மனத்தை அடக்கும் முன்பு மந்திரத்தை ஜெபிக்கக்கூடாது. மனம் அடங்கி ஒரு நிலைப்பட்ட திருப்தி ஏற்பட்டால். அதன் பிறகே மந்திரத்தை ஜெபிக்க வேண்டும்.

**மனோவசிய மந்திரம் வருமாறு:**

"நான் இப்பொழுது நானாகவே இருக்கிறேன். இந்த நான் என்ற உணர்ச்சி கடவுள் எனக்களித்து இருக்கும் மனோசக்தியாகும். கடவுளின் ஒத்தாசையால் நான் இப்பொழுது கடவுளாகவே இருக்கிறேன். கடவுள் என் மனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டு என் உடலால் உள்ளத்தால் என்னை இயக்குகிறார். ஆகவே நான் சக்தி மிக்கவன். என் சக்திக்கு முன்னால் உலகமே துச்சமாக இருக்கிறது. நான் எதை நினைக்கிறேனோ அது நடந்தே தீரும். ஒரு மனிதனை என் விருப்பம் போல என் மனோசக்தியால் ஆட்டிப் படைக்க முடியும். நான் எதைச் சொன்னாலும் அது அப்படியே பலிக்கும். நான் என்ன நினைத்தாலும் அது அப்படியே நடக்கும். ஒரு பொருள் நிர்மூலம் ஆகவேண்டும் என்று நான் நினைத்தால் அது அப்படியே நிர்மூலம் ஆகிவிடும். ஆனால் நான் அப்படி நினைக்க மாட்டேன். ஏன் என்றால் நினைப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானல்ல. கடவுளின் ஆத்மசக்தி என்னை நினைக்க வைக்கிறது. கடவுள் எதையும் யாரையும் அழிக்க மாட்டார். நான் கடவுளாகவே இருந்து, கடவுளாகவே சிந்தித்து, கடவுளாகவே செயற்படுவதால் என்னுடைய சொல், செயல், சிந்தனை எல்லாமே மகத்தான சக்தி வாய்ந்தவையாக இருக்கும். கடவுள் என் உள்ளிருந்து இயக்குவதால் என்னால் எதையுமே சாதிக்க முடியும். கடவுள் அருளால் நான் எதையும் சாதிப்பேன்"

இந்த மந்திரத்தை உச்சாடனம் செய்யும்பொழுது இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள நெற்றிக்கண்ணில் மனத்தை ஊன்ற வேண்டும். சுவாசத்தை வெளிவிடாமல் உள் அடக்கி மனத்தைச் சிதற விடாமல் தியானிக்க வேண்டும். அப்படி தியானித்துக் கொண்டிருக்கும்பொழுதே அபாரமான சக்தி உங்கள் உடம்பில் தோன்றுவதை உணர முடியும். நம்முடைய உடல் காற்றை விட இலேசாகி விட்டது போன்ற உணர்வினைப் பெறுவோம். நமக்கு உடம்பு என்ற ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகமே எழக்கூடும்.

அதிகாலையில் இவ்வாறு மந்திர உச்சாடனம் செய்வதோடு இரவில் கூடிய மட்டும் நள்ளிரவில் உலகம் அமைதியாக இருக்கும் நேரத்தில் இந்த மந்திரத்தை திறந்த வெளியில் நின்று உச்சாடனம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் 100 மந்திர உச்சாடனம் செய்து, பிறகு இரண்டு வினாடிகள் ஓய்வு எடுத்துக் கொண்டு மறுபடியும் 100 முறைகள் மந்திர உச்சாடனம் செய்ய வேண்டும். இதே மாதிரி இடைவெளி விட்டு ஒவ்வொரு தடவையும் மொத்தமாக 1008 முறை உச்சாடனம் செய்ய வேண்டியது அவசியம்.

இவ்வாறு அதிகாலையில் மட்டுமின்றி நள்ளிரவிலும் செய்யப்படும் மந்திர உச்சாடனம் முப்பது நாட்கள் வரை தொடர்ச்சியாக நீடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நீங்கள் முழுமையான மனோவசிய சக்தியைப் பெற்று விடுவீர்கள். உங்களால் உலகத்தில் சாதிக்க முடியாத காரியமே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விடும்.

## மந்திரங்கள் பலிக்குமா?

இந்த நவீன யுகத்தில் மந்திரங்களைப் பற்றி பேச்செடுத்தாலே பலருக்கு அது கேலிக்குரிய வியமாக இருக்கும். மந்திரங்களாவது, பலிப்பதாவது, இதெல்லாம் பத்தாம்பசலித்தனமான ஏமாற்று வேலை என நினைப்பவர்கள் அதிகமாக உண்டெனலாம்.

இவர்களுடைய வினாக்களுக்கு விடையளிப்பது வீண் வேலை. ஏன் எனில் இவர்கள் மந்திரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவதும் இல்லை. இது பற்றி ஆராய்ச்சி செய்யும் ஆர்வம் காண்பிப்பதும் இல்லை. மந்திரங்களைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளாத நிலையில் அது தவறு மோசடி என்று வாதிப்பவர்களுக்கு எவ்வாறு விளக்கம் அளிக்க முடியும். ஆகவே அதை விடுக்கிறோம்.

மந்திரங்கள் என்பவை ஆழந்த கருத்துக்களை உள்ளடக்கிற சக்திமிக்க சொற்கள் ஆகும். மந்திரங்களின் முழுப் பொருளையும் விளங்கிக் கொள்ளாமலே கூட நம்பிக்கையுடனும் பக்தி சிரத்தையுடனும் அதை உச்சாடனம் செய்யும்போது எண்ணங்கள் வலிமையடைகின்றன. ஒரு மகத்தான சக்தி எண்ணங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

அந்த நிலையில் நாம் எதை சாதிக்க விரும்புகிறோமோ, அந்த சாதனை எண்ணங்களின் துணையால் நமக்கு கைவசமாகிறது.

கடவுள் மீது ஆழ்ந்த பக்தி உள்ளவர்களும் மந்திரங்களின் மீது திடமான நம்பிக்கை உடையவர்களும் இந்த மந்திரங்களை உச்சாடனம் செய்வதின் மூலம் நிச்சயமாக நல்ல பலன்களை அடைய முடியும் என்பது மட்டும் உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரம் கற்றுக் கொள்பவர் நடந்துகொள்ள வேண்டியது

a பிறர் செய்த குற்றத்தை பொறுக்கவும் மன்னிக்கவும் அதை உடனே மறக்கவும் வேண்டும்.

a எந்த ஒரு உடலுக்கோ எந்த ஒரு உயிருக்கோ எந்த ஒரு மனதுக்கோ தீங்கு நினையாமல் இருக்க வேண்டும்.

a அகச்சுத்தம் புறச்சுத்தம் உடையவராயும் கடவுள் வழிபாடு உள்ளவராயும் அனைத்து உயிர்மீதும் அன்பும் கருணையும் உள்ளவராக இருக்க வேண்டும்.

a பிறருக்கு தீங்கு செய்ய நினைக்கும் எந்த ஒருவரும் தனக்கே தீங்கை தேடிக்கொண்டவராகும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

a அனைத்துயிர் மீதும் அன்பு கொண்டவனாக இருத்தல் வேண்டும்.

a பிறருக்கு கெட்ட எண்ணத்தால் வைப்பு சூனியம் ஏவல் முதலியன செய்யக்கூடாது. பிறருக்கு எதிரிகளால் ஏற்பட்ட சூனியம், ஏவல், பில்லி இவைகளை அவர்கள் படும் கஷ்ரத்திலிருந்து விடுவிக்கவும்.

a இத்தகையோருக்கு தேவதாவசியம் மாந்திரிய சித்தியும் கைவசமாகும்.

a ஆணவம் அற்றவராகவும், அன்னை, தந்தை, குருவிடம் பக்தி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

சுபம்

மந்திராரூட வாக்கியம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா. விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

தொகுப்பு நூல்கள்:

- குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் 335.00
- சிவமுத்து மணிமாலை 165.00
- சிவமுத்துமாரியம்மன் குளுர்த்திப்பாடல்கள் 145.00
- வயிரவர் காவியப் பாடல்கள் 90.00
- காளியம்மன் காவியப் பாடல்கள் 155.00
- பேச்சியம்மன் காவியம் தாலாட்டுப்பாடல்கள் 135.00
- நாகம்மை புகழ்மாலை 130.00
- மடப்பிட்டி மீனாட்சி அம்மன் அருட்பாமாலை 130.00
- கடல் நாச்சியம்மன் காவியப்பாமாலை 125.00
- வராகி மாலை மந்திர ஏந்திரச் சக்கரங்களுடன் 385.00

மேற்படி நூல்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொண்டு பெற முடியும்.

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B.
077-6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org